வெண்பா.

நம்பாதே தேவைவதி ராமநாதன் மிளகு
சம்பாவுண் டேலதனைத் தான்வாங்கி—உண்பதுவும்
உண்டோ விலையென் றோர்பெறுமை போற்புகலக்
கண்டோங் களுவொன்று காண்.

மறுநாள் சம்பாப்பொங்கல் அதிரசம் அளிக்கப்பெற்றுச்
சொல்லிய வெண்பா.

மெய்ராம நாதர் விடத்தையுண்டா ரென்றகதை
பொய் வயிற்றிற் பாரும் புலவீர்காள்—நெய்மிளகு
சம்பாவை யுண்டவிடந் தங்கிற்றுக் கண்டத்தி
லின்பா மதிரசத்தி லே.

மழைபொழிய வேண்டிச் சேதுவேந்தர் கூறச்சொல்லிய
வெண்பா.

தெண்டா யுதாபழனிச் செவ்வேளே யுன்கிருபை
யுண்டா வதுமுலகி லுண்மையேல்—விண்டுமழை
எங்கும் பொழிய விராமநா தன்மனது
பொங்க வருளே புரி.

பழனிக்காவடி கட்டியெடுக்கும் பொழுது மயூர நடனச் சிலம்
பொலியைச் சேதுபதி கேட்கப்பாடிய

வெண்பா.

அரவின் மிசை நடன மாடுங்க லாப
மரகத மயூரமே வைகா—புரியின்
மருவு பழனிமலைவாழ் வடிவேன்
முருகனைக்கொண் டோடிவா முன்.

கடுக்கனிட்டபோது பாடிய

வெண்பா.

கனிவுதெரி யாத கசடர்பாற் சென்றே
யினியதுமி ழோதாதே யென்று—முனிவதாய்க்
கன்னத்தி லேயடிக்கக் காதிற் கடுக்கனிட்டான்
மன்னனெங்கள் சேதுபதி மால்.

## [illegible]கோடு செங்கோட்டுவேலர் மீது ஐந்துபாஷை

ஆசிரிய விருத்தம்.

மதுரரச மொழுகு கவிபாடி வடுகரிடம் வந்துரைத்திடில் மெல்லிகா
மாட்லாட வோயால கூஸ்தாவுலேயென்பர் வருகன்னட ரகுரைக்கில்
மலஹ்ளீ ஹறஹேஹறனு ஹேறனு யாமேன மாத்தனு விகார இல்லா
மதசேனு சுமம்தே இராஹோனெ வென்பார்கள் மலையாள ருக்குரைக்கிற்
பதராம விவிடையே எந்தானு காரியம் பராபர வென்பர் தூர
பட்டாணி மார்கள்பாற் சென்றுசமயந்தனைப் பாத்தனைக் காலுமரபி
பாதும்கு மாலும்னை தார்னஹே லென்பார்கள் பன்னுநற் றமிழர்தமமைப்
பாடிடிற் கவிகேட்ப தில்லையென்பர் மனிதரைப் பாடியலையாமலருடா
விதுஜ்ஜடில தாபரம குருநா, வம்ருதகுண வீக்ஷண கடாக்ஷ சகன
விபுதகண ஸேவித கஜானன ஸஹோதர விசித்ர பூஷண சோபித
விஜயதரி கிடகுகு ஜகண வெண்வேபரக விதநடன முறதுப்ரஸ்நா
வீரப்ர தாபரண சூரதநிரிலோக ஜய வேதஸாரஸ்வரூப
நிதமுமுன தருமைமிகு மிருசரண கமலமன நினைபவர் மிடிமையறவே
நீக்கிமகிழ் தேக்கிநலபாக்கிய சலாக்கியமும் யோக்கியமுமாக்கிய நல்வாய்
நிகிலவுயிர் தநுகரண புவனபோ கங்களுற நினைகருணை வடிவமோயகு
நிமலியுமை தருபுதல்வ பணிகிரியி னிலமுருக சியமவரி திருமருகனே.

## மூலனூரைச் சார்ந்த நீலம்பூர்க் காளியம்மன் மீது

விருத்தம்.

குலவருக்க மலைச்சியிழி வாம்பசாசுக் கொடியவள் கரந்தாரிவிடா துடுக்கை கொட்டிப், பலபெருக்குந் தீக்கண்ணியெழுதாக் கேள்விப் பறைச்சியொரு கைசசூலி மிருகியாமா, பலவருக்குக் காலெடுக்குஞ்சதிகாரி நீலம்பூரப் பத்திரகாளி, புலவருக்கு வேணதெலாந் தருவாளின்னம புகழலாந் தமிழ்பாடிப் போற்றலாமே.

சித்திரகவி.

## நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடி மீது ஆனையடிச் சதுரங்கபந்தன

வெண்பா.

காரை பங்கன் மெய்யாணூர் காஞ்சிசய நதிரு
மூரைவன மோர்நலமா லானதனை — யேபமைசாபிற
டக்கபுக மேமேகாமு தாதா நலதமபிச
சர்க்கரைமன் றாடி ராசன்.

இலக்கணப்பிரகாரமமைக்கப்பெற்ற அறுபத்து நான்கறையிலிப் பாட்டை எழுதி, முதலறைமுதல மூன்று கடைவீதிகளிலும் வலமாகவா "காரையாணூர நலதம்பிசர்க்கரை மன்றாடி ராசன்" என்றும், [illegible]

சொன்ன முதலரைக் தொடங்கிக் கீழேவர "காங்கய மன்றாடன்", என்றும் அமைதல் காண்க,

## நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியின் மனைவியார் வள்ளியாத் தாளுக்கு விடுத்த சீட்டுக்கவி.

திருமருவு புலியூரில் முருமேசர பரவிந்த செங்கமலபாததி யானை, திரிபுரங் களிப்பினில் முகங்கொண்ட களிமலைசெருக்கி டச்செய்வாசிப்பு, மெய்யாகராகாலமனைய வென்னமேமதாரிக செழுந்தமிழ் பொழிக்கு மேகமே, தென்பரவு மங்கைபுர வட்டமண பாரதி தெளிக்கெழுதி விட்ட நிருபம், தருவலவுகாமவையூர் நல்லசேனாபதிச் சர்க்கரைமன்றாடி ராஜன, தனதுமனையாளினிய சற்பினி லருந்ததி சமானசற்குணபூஷணி, சந்ததிபெறும் பிவளர் சிவமலைப் பல்லவன்றந்தசீய நதாபுதரி, தருமமிகுபயிற குலவள்ளிநாயகி யெனுந் தாயானை மகிழ்ந்து காண்க—அருள் பாவு சிவனுமைக்கு திருக்கல்யாண மானகப தினம்ராவீம்ப, ஆகையால மங்கலிய விரதபூசனை செய்ய ஆருமாதரவறிகிலேன், ஐநூறுவெள் ளப்பச்சை யரிசிபா சிப்பயறதற்குள்ளமேல் முஸ்திதி ஆவின்வெய் வெல்லம் முழுமூஞ்சு பாலதயிர் வெண்ணெ யரியதாமி ரண்டுறு கறிகாய்—பெருவலவு சந்தனங் குங்குமம் புனுகுஜவ் வாதுபரி மளமுமுணது, மருகமட் கோர்புடவை பாக்குவெற் றிலை நல்ல வாழையிலை மிவையுமே, வாணருக் காரனுப் பினதெனக் கேட்பவர்கள் மனதுமென் மேனுமெச, மன்னர் புகழ் சர்க்கரைத் துரைராசி தநதலெனை வரவனுப் பிட வேண்டுமே.

### காங்கேயம் பட்டக்காரர் மீது

கட்டளைக் கலித்துறை.

கடத்தைக் கிழித்துக் கடாசலக் கோட்டுடன் கச்சுமுத்து
வடத்தைக் குனிக்குங் குவிமுலையாள் கொண்ட மையலைப்பா
ரிடத்தைக்கிழித்துத் திசைப்பட நாகத்தை யெட்டி யெட்டிப்
படத்தைக் கிழிக்குந் துரங்கா சிதம்பரப் பல்லவனே.

மூன்று வெண்பாக்கள்.

மாசிலா நூல்வலா மைப்புயலி னொப்பு தமிழ்
வாசிப்பார் மேன்மனமு வப்புறுக—வீசகைக்கு
வால்வளோம திப்ப வருண் மன்னவன் சிங்கைக்கு
மால்சிதம்ப ரப்பல்ல வன்.

இது நூல்வலா என்பது தொடங்கி மாசிலாவரை, படிக்கவொரு வெண்

பாவாகவும், மைப்புயலினென்பது தொடங்கி நூல்வலா வரைவாசிக்க, மற்றொரு வெண்பாவா தலையுங்காண்க.

விருத்தம்.

எங்கள் பெரியோர்கள் தரப்பிழைந்தார்கள் கவிராய ரென்றீரே யன்
றுங்கள் பெரியோர்கள் தந்த பொருள்காட்ட வல்லீரோ வுண்மையாக
எங்கள் பெரியோர்கள் தரு தமிழ்கூறி நிமிர்கின்றீ ரிலையோற்றாழ்வீர்
உங்களுயர் வெங்கள் பிச்சையென்றறிவீர் பல்லவப்பே ருடையகோவே.

தென்கரை நாட்டுப்பட்டக்காரர் வேணுவுடையார் மீது,

வெண்பா.

சேணுடர் போற்றுஞ் சிவனப் பிரமேயர்
தாணுடு கொற்றையூர்க் தருமசிந்தை—வேணுடையான்
தன்னையடுக் தார்க்குத் தருவான் றருவெனவே
என்வபொழிக் தாரடைந்தே னிங்கு.

பூசைக்குச் சாராயமில்லை என்றவன் வைத்திருந்த 10 மிடாச்சாராயம் தண்ணீராகவும், பின் அவன் வேண்டிக்கொள்ளப்பழையபடி சாராயமாகவும் பாடிய,

வெண்பா.

ஆத்தா ளருளை யடைந்த கவிராயருற்றுப்
பார்த்தாற் பிணிபோம் பயித்தியம் போம்—சேர்த்தமிடாச்
"சாராயம் நீராகும்" தண்ணீர் சாராய முமாம்
பாரோ ரறியும் படி.

புரவிபாளயம், பாளயகாரர் கோப்பண மன்றாடியார் மீதுபாடிய,

விருத்தம்.

மண்டலத்திற் சமஸ்தான பதிகளெல்லா மறையவர்க்கு முத்தியோக வகையினோர்க்குந், தண்டமொடு கொடுத்தார்கள் கொடுக்கின்றார்கள் தரணிதனிலதைப் புகலுஞ் சரிதமில்லை. தண்டமிழ்வாணருக்கு நல்ல வார்த்தை தண்ணீர் தந்திடினுமழியாத தமிழ்நிலைற்றிக், கொண்டு புகழ்தருவ ரெனப்போற்றுமெங்கள் கோப்பண மன்றாடி யெனுங்குண சீமானே.

செருப்புத் திருட்டுப்போனபோது பாடிய,

கட்டளைக்கலித்துறை.

இருப்பரி வாளும் வளைதடி சக்கர மேந்தியொரு
உருப்பணி ஞன்குய வன்கருப் பண்ணனென் றுன்னையுமே

பொருப்பாரு ளிலர்பூர்க் காரிகைப் பாடும் புலவரிடுஞ்
செருப்பைத் திருடி யவனைப் பிடிக்கத் திறமில்லையே.

## ஊறிச்சிநகர்ச் சின்னத்தம்பிக் கவுண்டர் பேரில்,

### விருதுகள்.

திருவுலவுமகமேரு வரையைக்குனித்தூற் செவ்விளனியைச்சிதை
த்துச், சீதவனசத்தருமனைப்பாக மேசெய்த சிந்துரக்கிம் புரியினைச,
செகுத்தாணி முடியினை நிறுத்திரெட்டென வெட்டி வெயசகபவான
த்தினைச், சிறையெனத் தள்ளியே செப்பைக்கடைந்தபூஞ் செண்டைத்
தடிந்து நிர்த்தூச செய்யதக்கசமிழை விலைமகிழ்த்தலங்கினிற் றிரியக்கடை
ப்படுத்திச, திருசணியமைந்து நூற் கர்து கந்தனைச சிறந்த மோதிப்பு
டைத்துச், செம்பொற் குடந்தையுலே யினில்வைத்துருக்கி மாற்றது
வெனவுரைத் தாண்யாய்ச், சேர்த்து வில்வக்கனி தனைக்குடைந் தகனு
னே சித்திரந் தனையடைந்தே, அருணருங் குமகளப சந்தன கதம்பம
தாரிந்து திலகங்கள் பார்த்து, மண்ணேர்ந்து விம்மிமெழில் வீணையையனைக்
கின்ற வனகரநியும் புணர்ந்தே, அநுபோக மதுசெயுங் கூடாரமென்னவு
முலை யரிவையே புணர்ந்தே, அங்கசன் கணையிலும் மணிமதித்தண
லிலு மலைநடன் முழக்கத்திலும், அருங்குயிற் றொனியிலுந் மருண்டசந்த
த்திலு மணலிலுய் மெழுமென்னவே, அகமுருகி நிமிஷமும மெனவருக
வெறிகருக வாவின்யத சலதிபெருக, அஞ்சுக மெனுஞ்சொன்மொழி
கொஞ்சியயல் மிஞ்சிமன நஞ்சியபாகஞ்சிகெஞ்சி, அமுதமொழி குளறி
யுடல் புளகமுற நினைவுமற உயர்வுகொடு மெல்லசனடாய், மருவுலவு
ரதிமதன னெனவுறுதுரை சமுகமதின் மருவியங்கிருலுமதிக, மடிமைகயர்
நரம்புவார்கள் சங்கித முழுவகுவர்கள் வண்கவிஞர் சபைகமொரு பால்,
மதியூகியெனவரசு புரியும்வகை சொலுமந்திரி மார்கள் மன்மானமொரு
பால், மறுமன்னரைச்சயஞ் செய்துவரு தளகர்த்தர் வரிசை பெற்றுவ
மொருபால், மகராசவொழுகிவிடு சனதாபதிலொப்பமது வாங்குசம்பிரதி
யொருபால், மன்னுங்குடிசனங்கள் தன்னிலவனரணமனையின் வளமை
யிது வகைதெரிந்து, பாதலுப்பனன் தூதி தேதுபதிநிளிமீது வாதுசெ
ய்யத்தகாது, வனவனச மலரிலுறை வடமுதகு திருவளிதை வல்லவரு
மெயலிமெனவே, தருண சபகநாரி, தினையனைய சின்புயப் பாபமதை
யருள் புரிகுவாய், சரணைப்புருதுமைவர சுபமளிக்கு மிஜயகுணே தானகர்
ஞவகாரா, சங்கு புஷ்பங்கிசம் குர்சசதுரங்கதவனி தந்திர வசந்த யிந்தி
ரா, சங்கீத பாஷியைய பத்தலை லம்போத குண சாமபாராஜ்யலட்சுமீகர,
சகுடந்தியிலிருந்து சனைதம்பி நிமயைனச சுதுரடமிசதுரக, சாந்த
மனதாக்கரிக ஆண்மைகுல வேந்த புகழ் சமுக்கசுகதலவலரா, தரும சின்
னத்தம்பி மகிபனருளியபால தமிழ்வலர் சகாயமேய, தனதுணைக்
குடிமிராசர்கள் மனதெண்ணப் பொன்பயின் மோகன தனசின்னத்
தம்பி மகீபதியே.

விருத்தம்.

அர்த்தமிலாப் போலியாசாரம் பேசியறிஞருடன் றமர்களை யுமகலவைத்துச், சுத்தசைவர்தா மென்று செருக்குமந்தத் திற லினோர்க் குயர்வுதந்த திறமையாளர், இத்தரையிற் றமிழ்ப்புலவ ரலரோ வென்றே யெண்ணாது மாறுரைப்பா மெனவோராது, சித்தமகிழ் இன்றுரை மதியா மேன்மை தெளிமதியா சின்னயசு சிலவானே.

கூனம்பட்டி மடத்தில் தங்கியிருந்தபோது புசித்தாயா? எனப் பாரதியார் கேட்க, இவர் கையேட்டுக்காரத் தம்பான் சொன்ன

வெண்பா.

மொட்டைச் சோழச் சோற்றின் மொத்தையிட்டுக் கத்தரிக்காய்த்
தட்டைச்சாற் றைத்தூக்கித் தானிட்டார்—பட்டமுறு
மாணிக்க வாசர் மடாலயத்தா ரையாவுண்
ணுணிக் கடிந்துவந்தே னுன்.

அறியாது செய்துவிட்டார்களென மடத்தார், அழைத்துபோய்உண்பித்தபின் கேட்டபோது சொன்ன,

வெண்பா.

துவயல் வருவல் துவட்டல் கறியு
மவியல் குழம்பிரச பப்பம்—அவல் வடகம்
பேணிவடை பாயசநெய் பேணி யமுதளிக்கும்
மாணிக்க வாசர் மடம்.

அந்தியகாலத்தில் முடிவாகச்சொன்ன

வெண்பா.

என்னவென்ன தீமை யெளியே னியற்றிடினும்
அன்னபிழை யெல்லாநீ ரக்கியே—உன்னுடைய
பொன்மலர்த்தா ளீந்து புரக்க விதுசமயஞ்
சின்மயவு மேச சிவா.

உ

முருகன் றுணை.

# சிவன்மலைக் குறவஞ்சி.

## பாயிரம்.

Dr. U. V. S. Iyer ... Madras

காப்பு.

விநாயகர் துதி.

விருத்தம்.

நீர்பரவு சலடிதர பரமா நந்த
நிஷ்கள நிராலம்ப நிமல னென்னச்
சீர்பரவு சத்திசிவா சலத்தில் வாசன்
சிவசுப்பிர மணியர்பதந் தினமும் வாழ்த்திப்
பேர்பரவு சரவணப வாவெ னுஞ்சொற்
பேசுகுற வஞ்சிநா டகத்தைப் பாடக்
கார்பரவு மிபமுகமைங் கரன்கர்ப் பூரக்
கணபதித னிணையடிகள் கருது வோமே. க

சத்தி துதி.

பூரசுதந் திமிருழங்க முதுமறை விளங்க விண்ணாட்
டரசுபங் கயன்முகுந்த னமரரும் வணங்க கங்கா
தரசுதன் சிவாத்திரிவா சன்மலைக்குற வஞ்சிபாட
சரசுவதி யிந்திரை போற்றுஞ் சத்தியை வணங்குவாமே. உ

திருமால் துதி.

வில்லமங்கை யின்கொடருச் சனைதான்செய்து
வேணாரம் பெறுமிமய வெற்பன்றந்த
நல்லமங்கைக் கோர்பாகந் தருபால வண்ணா
நாதர்சிவ சயிலசடா னனன்றனை மீது

செல்லமங்கை யாம்நீல வளகபாரஞ்
சிறந்தகுற வஞ்சிநா டகத்தைப்பாடக்
கல்லமங்கை யாக்குபத வேங்கடேச
கரியமா லிணையடிகள் கருதுவாமே. ௩

## பார்வதிதேவி துதி.

முன்சுண்டக் காய்ந்திட்டா லின்சொன்மாதர்
மேன்கலைக் குட்டியங்கா முனிவோர் யார்க்கும்
[illegible] வக்காமார்சிவ சைலத்தில்
அகமகிழ் வினவுவா மருள்சீலமேலான்மேல்
[illegible]ருஞ்சுண்ட குழல்நீல விழிசேய வைவேல்
மடந்தைகுற வஞ்சிநா டகத்தைப்பாட
[illegible]சுண்ட நாதர்பங்கில் வாழும் லோக
[illegible]கியார் பூம்பதத்தை நம்புவாமே. ௪

## சரஸ்வதி

மகர தோரணங்க டெருவீதி தோறும்
மங்கள விலாசமட மண்ட பங்கள்
சிகரகோபுர சித்திர மாட கூடஞ்
சிறந்துவளர் பட்டாலிச் சிவாச லத்தின்
தகரின்மிசை நடங்குலவும் வடிவேற் கந்த
சாமிமிசை குறவஞ்சித் தமிழைப் பாட
அகரமுதலெம் பத்தோ ரெழுத்தாய் வந்தென்
அடிநாவிற் குடிகொள்சரஸ் வதிகாப் பாமே. ௫

## அநுமார், கரியகாளி, துற்கை, சத்தகன்னிகள் துதி.

கரகதண்ட விதிபூசை புரிசிவா ததிரிக்
காங்கயன்மேற் குறவஞ்சிகனிந்துபாட
மரகதமால் தூதரநு மந்தராயர்
வனசமல ரடியிணையை வணங்கியேத்தி
யுரகதா டமருக கங் காளிசூலி
யுமைகரிய காளிபத முளத்தில் வைத்துத்
துரகதகண் டீரவததி வீரகாளி
துர்க்கை சத்த கன்னிமையுந்துதி செய்வாமே. ௬

## பச்சோடநாதர், பத்திரகாளி, மற்றைத் தேவர்கள்.

பூங்கயன நாட்டமதிவதன வள்ளி,
பூவைகுஞ்சரியை மணம்புணர்ந்து வாழ்கத்
தாங்கயன நாட்டமிடவருஞ் சிவாத்திரிச்
சண்முகன்மேற் குறவஞ்சித் தமிழைப்பாட
ஓங்கயன நாட்டவங்கள் செயவுகந்த
வுமையவள் பார்வதிபுரப்பச் சோடநாதக்
காங்கயன நாட்டமாயீசர் பத்திர
காளிமற்ற தேவரையுங் கருதுவோமே. ஏ

## பழனிவேலர் துதி.

மறவஞ்சி வாயநமவெனும் வேதாந்த
மந்திரத்தை மனதுபற்றும் மறையோர்யார்க்கும்
பிறவஞ்சி னருமாயை யாசாபாசப்,
பேதமைநீத்திடுஞ் சிவன்மா மலைவேலன்மேற்
குறவஞ்சி நாடகங்கள் பாடியாடிக்
குவலயமெலா மதிக்கக் கூறுதற்குத்
திறவஞ்சிக் கொடியிடைக்குஞ் சரியைத்தோயுந்
தென்பழனி வேலர்பதந் தியானிப்போமே. அ

## அவையடக்கம்.

வானுறு மமரர்பிரான் கொடுவந்து வேண்டி
வழங்கவுப ரிபமகளை மணமுடித்து வெய்ய
கானுறுந் தினைப்புனத்துக்கால் கடிக்கச் சென்று
களவழியிற் குறமகளைக் கனிந்தணைந்த குகன்றன்
தேனுறும் பூந்தொடை நக்கீரனருணகிரித்
தேவர் தமிழேறு திருச்செவிகளினாலோரா
யானுறுஞ் சிறுபுறச்சொல் புன்றமிழும்புகுது
மெய்வளத்தே யுனியிசைத்தேனென வெறுப்பாரெவரே. க

பாயிரம் முற்றிற்று.

## தோடயம்.

இராகம் - நாட்டை.

நீர் மருவு செஞ்சடில நிமலர் சிவன்மலை யில்வளர்
நீப மலர் மாலையணி சேவல வன் மீதில்
வார் மருவு தனமங்கை குறவஞ்சி நடங் கூற
வாலை திரிபுரை புவனை பரைப்ப தங்கள் துணையே—
ஆ. ஆ ஜய ஜய.

காஞ்சி நதியான் பொருனை காங்கய னன்னாட்டி லருள்
கதிக்குஞ் சிவ மாமலையிற் கந்த சுவாமி மீது
நான் சிந்து குறவஞ்சி நாடகத் தைப் பாடுதற்கு
நாமகளும் பூமகளும் நான்முகனுந் துணையே—
ஆ. ஆ ஜய ஜய.

அமரர் முனி சனர்பரவு சிவசைல குமரர் மிசை
அமிர்த மொழிக் குறவஞ்சி அருந் தமிழைப் பாடத்,
திமித வாரிதியை முன்பு தமதுகையில் வாரி யுண்ட
சித்தரகத் தியர்பதமுந் திருமாலுந் துணையே—
ஆ. ஆ ஜய ஜய.

அஞ்சுகங்கள் பண்பயிலு மைந்தரு நிறைந்து வளர்
வான சிவ பூதர சடான னன்றன் மீது
கஞ்சுமிழுஞ் சனமின் குற வஞ்சி நடனங்கள் சொல
நவ வீரருபய பத நளின மலர் துணையே—
ஆ. ஆ. ஜய ஜய.

ஆகம வேதாந்த ரச பாக சிவநாக முறு
ஆறுமுக சரவண பவா நந்தன் மீது
நாகரிக சகமோக குறவஞ்சி நடங் கூற
நாவலூ ராலால நாவல னற்றுணையே—
ஆ. ஆ ஜய ஜய.

### மங்களம்.

பல்லவி,

மரகத மாயூரனுக்குச் சயமங்களம்—குற
வள்ளிமணவாளனுக்குச் சயமங்களம்

அநுபல்லவி.

பரசிவைகுமாரனுக்குச் சயமங்களம்—செல்வப்
பட்டாலியூரனுக்குச் சயமங்களம் (மரகத).

சரணங்கள்.

தாரகசம்மாரனுக்குச் சயமங்களம்—வச்சிர
சத்திதரகர்த்தனுக்குச் சயமங்களம் (மரகத)

கதிருமிழ் கிரீடனுக்குச் சயமங்களம்—திவ்விய
காங்கயநன்னாடனுக்குச் சயமங்களம் (மரகத)

தேவகுஞ்சரி காந்தனுக்குச் சயமங்களஞ்—சத்தி
சிவாசல வேந்தனுக்குச் சயமங்களம் (மரகத)

---

### இராகம் மோகனம்.

சரவண பவகுக நமோ நமோ—சிவ
சைல காங்கபதே நமோ நமோ.

பரிபுர கிண்கிணி சதங்கை சிலம்பொலி
பழமறையின் பொருளதென முழங்க
மரகத சிகிமிசை மகிலமைய னொடியினில்
வலம்வரு நாதா நமோ நமோ—சிவ (சரவண)

புங்கவர் பணிபத பங்கச மதகர்வ
பங்க சங்கர னருள் பாலா சய
துங்க மயூரதுரங்க மங்கள சுர
கங்கவர குமரா நமோ நமோ—சிவ (சரவண)

கோலாகல விசித்திர குஞ்சரி குறமகள்
லீலா விநோத நிரந்தரனே
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
தற்பரானந்தா நமோ நமோ—சிவ (சரவண)

### கட்டியக்காரன்.

விருத்தம்.

பரிதிமதி ப்ரபைமழுங்கத் திலதந்தீட்டி
பதித்தநவ மணிமகுடமுடி யிற்சூட்டி
விருதுபல ஆடையாபரணம் பூட்டி,
மேகலையி லொட்டியாண மிசைத்துக்கட்டி
சுருதிவசனங்கள்பல வும்பாராட்டித்
தும்புருசங் கீதமுறைச் சுதிகள்கூட்டி
இருநிதிசூழ் சிவன்மலைக்காங் கேயன்பாத
மெச்சரிக்கை பராக்கெனக் கட்டியன் சொல்வானே.

இராகம் சௌராஷ்டிரம், அடதாளம்.

பல்லவி.

வந்தனன் கட்டியக்காரன் சபைதனில்
வந்தனன் கட்டியக்காரன்.

அநுபல்லவி.

இந்து தவழ் சிவாத்திரி யிறைவன் காங்கய நாட்டில்
(வந்தனன் கட்டியக்காரன்)

சரணங்கள்.

நவரத்ன மகுடங்கள் சூட்டி பிறை
நன்னுதலில் வெண்ணீறு திலதமுந் தீட்டி
பவவினை யகலவே ஓட்டி அருள்
பரமகுருவின் முத்திரைப் பிரம்புகை காட்டி
(வந்தனன் கட்டியக்காரன்)

வேலுமயிலுந் துணை யென்ன நாலு
வேத சாஸ்திரங்கள் புராணங்கள் சொன்ன
மாலு மயனுமிந்தச் சன்னதியில் முன்பு
வழிவிடுங்கள் பராக்கெச்சரிக்கை யென்ன
(வந்தனன் கட்டியக்காரன்)

சுரர் முனிவர்க ளடிவ ணங்க தேவ
துந்துமி பேரிகை தாளமத்த ளங்கள்
அர அர சத்தங்கள் மு ழங்க பர
மானந்த விபூதி யாவர்க்கும்வி ளங்க

(வந்தனன் கட்டியக்காரன்)

நவரச செந்தமிழ் விண்டு சிவ
ஞான ருத்திராக்ஷ தாவடங்கள் கைக்கொண்டு
சிவன் மலை வேலருக்குத் தொண்டு செய்து
திருவடி மகிமையும் அருளையுங் கண்டு

(வந்தனன் கட்டியக்காரன்).

## கட்டியக்காரன் பராக்குக்கூறல்.

குங்கு மாங்கித தேக குகனே பராக்கு
குமரா சரவணபவ ஷண் முகனே பராக்கு
சங்கரி யிந்திரைக்குமரு மகனே பராக்கு
சத்தி சிவன் மலையினிற் குழகனே பராக்கு

சதுர்முகனுஞ் சரஸ்வதியும் பணிந்தார் பராக்கு
சசியிந்தி ரன்பதமலரைப் பணிந்தார் பராக்கு
விது ரவியுஞ்சுதி முறையின் றுதித்தார் பராக்கு
விண்ணுலகத்தவர் வாழ்வு கதித்தார் பராக்கு

அகில சனர் தோத்திரஞ் செய் கீதா பராக்கு
அநேக மாகியவ ரப்பிர சாதா பராக்கு
சுகர் பணியும் பரம குரு நாதா பராக்கு
சோதி மய மாகிய வி நீதா பராக்கு

அட்டவியி லாறு படை வீடா பராக்கு
அருண் மிகுந்த காங்கய னன் னாடா பராக்கு
பண்பு யர்ந்த பட்டா லி யூரா பராக்கு
பரம சிவன்மலை யினின்ம யூரா பராக்கு

### இதுவுமது.

### அகவல்.

நீர்கொண்ட நதியும் தார்கொண்ட மதியும்
சீர்கொண்ட பதியும் பேர்கொண்ட நிதியும்
மூவர் சந்நதியும் தேவர்தம் பதியும்
யாவர் சந்ததியும் பாவினன் றுதியும்
மெய்த்தவர் குகையும் பத்தியின் வகையும்
சித்தர் மூலிகையும் முத்தி யம்பிகையும்
நிறைந்திடு மிடமும் நிறங்கொள் பொன்புடமும்
சிறந்த மின்னடமும் சிரந்தரு வடமும்
மிகுநாக மாரமும் வெகுதேவ தாரமும்
மகிழ்கோவி தாரமும் தகுமாவித் தாரமும்
அரம்பையின் வளமும் நிரம்பிய பளமும்
மருங்கரு விளமும் குருந்து கூவிளமும்
கருமுகில் படியும் மருமலர்க் கொடியும்
குராக்கள் குடியும் முரசதிர் துடியும்
விளைந்த செந்தினையும் குழைபயிய நனையும்
விளங்கு தண்சுனையும் இளங்குமரனையும்
தாங்கிய தலமும் மாங்கரு ணலமும்
பூங்குயிற் குலமும் ஓங்கிய புலமும்
சூள்பல சலையான் நாட்பல துலையான்
வேள்நிலை குலையான் வாள்சிவ மலையான்
பொன்னினங் குரியான் அன்னமென் பரியான்
உன்னினுந் தெரியான் சென்னிபங் கிரியான்
முதிர்வனஞ் செழிக்கும் மதுமலர் தளிக்கும்
கதிரலை கொழிக்கும் சதுர்மறை முழக்கும்
சுராசுரர் குளிக்கும் பரகதி யளிக்கும்
இருவினை கழிக்கும் வைசமது வளிக்கும்
வெண்சங்க மூரும் பெண்சங்கஞ் சேரும்
கஞ்சங்க ளாரும் வஞ்சங்கள் தீரும்
மூழ்குவர் யார்க்கும் வாழ்வதுண் டாக்கும்

ஊழ்வினை தீர்க்கும் வேள்பகை நீக்கும்
இனவளம் படைக்குங் கனகுவடடைக்கும்
மனுநிதநடக்கு மனைநடை கிடக்கும்
மதி திகள் பெருச்கு மதிதவிருக்குஞ்
சுதிபயில் துறைக்குங் கதிர்வயல் படைக்கும்
வருணநீள் பதியாந் தருணமா நிதியாம்
கருணைவாரிதியாம பொருனை மாநதியான்
மாவகில் தென்னையும் வாழையும் புன்னையும்
பூவலர் கொன்னையும் புனற்சடைவன்னியும்
பலவு மந்தாரம் பனைகன்னிகாரம்
நலசம்பு வாரம் நாவல் விஸ்தாரம்
இனியபிப்பிலியும் இளகு செவ்வல்லியும்
கனகருநெல்லியுங் கற்பகவல்லியும்
செண்பகநாகமுந் தேக்குயர் பூகமும்
விண்படர் சோகமும் விருக்கமநேகமும்
நந்தி மாதவியும் நலம்பெறுமடவியி
லுந்தியேகுவியு முலுக்கிடக்குவியும்
பழமதாவுடைந்தே பலாசங்கலந்தே
பழனமதடைந்தே பயிருயிர் தழைந்தே
செந்நெல்கள் விளையுஞ் சிவந்திடுங்களையும்
பொன்னினங்களையும் பொழியுமும் மழையும்
யாங்குடன் பொழிந்து தேங்கிய புகழெலாம்
ஓங்கியே சிறந்த காங்கய நாடன்
சிகர கோபுரமுந் தெருவிருப்புரமும்
அகர சிகரமு மன்னசத்திரமும்
மாடமாளிகையுங் கூடமேளாளைகையும்
நீடுறுககனத் தாடிடுகொடியும்
அந்தணர் வேள்வியுஞ் செந்தமிழ்க்கல்வியும்
உந்திய குடிகள் உலவு சந்தடியும்
பூமலர்சோலையு மணிமேடையும்
பூமினாராடலுங் காமனார் கூடலும்

கிட்டாது வானமு கட்டோடு சோலையின்
மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாலியூரன்
நிரந்தரவசுரர் சிரந்துணிபடவே
பரவியநடனத் துரகமயூரன்
கடகளிறுடையான் கடம்பமாலிகையான்
அடையலர் வெருவ வதிரும் முரசான்
மரகதகலாப மயூரகே தனத்தான்
திரிலோக மெங்குஞ் செலுத்து மாணையினான்
சங்கரி புதல்வன் கங்காவரசுதன்
ஐங்கரன் றுணைவன் செங்கண்மால் மருமகன்
ஐந்தருநாத னயிராணி தனக்குச்
சொந்தமா மருகன் சுரர்கள் சேனாபதி
மலைராசன் பேரன் மதனன் மைத்துனன்
கலையுணர் புலவன் கருணைவாரிதியான்
பன்னிரு புயத்தான் முன்னான்கு கரத்தான்
சென்னியாறுளான் பொன்கை யீராறுளான்
சூரசங்காரன் குமார கம்பீரன்
வீரவாகுவுக்கு மெய்த்துணையானோன்
புராதனபரம புத்திர விசித்திரன்
சராசரமனைத்துந் தானாகி நின்றோன்
பூதப்படையான் புகழ்திருவுடையான்
சோதிச்சுடரான் றுங்கன களங்கன்
தேவர்கள் சூழ்கச் செகமெலாம் வாழ்கப்
பூவுலகெல்லாம் போற்றியே துதிக்க
அந்தர துந்துமி யநேக வாத்தியங்கள்
பந்தி பந்தியாய்ப் பற்பல முழங்க
அரம்பையர் நடன வாலாத்தியேந்த
கரங்குவித் தெதிரே கவிஞர் கொண்டாட
அந்தணர் வேத வாகமம் புகல
இந்திர வோலக்க மெனப்படை சூழப்
பார்புகழ் வீரைப்பட்டாலி யூரில்
தேரின் மீதிவர்ந்து செயசெய வெனவே

தவமுனி வார்க ளெவருமே துதிக்கச்
சிவமலைக் குமார் பவனிவந்தனரே.

---

## சிவமலைநாதர் பவனிவருதல்.

தரு இராகம். பயிரவி. அடதாளம்.

---

பல்லவி.

சாரி வந்தனர் தேரின் மீதினில்
மேருகிரியின் குமாரிமகனார்.

அநுபல்லவி.

சீருலாவிய தேவா கணமமர்; வீரைநகர்த்திருவீதிதனிலே.
(சாரிவந்தனர்)

கவரியிரு புறங் கவின வீசிடத்
தவள சத்திரந் தயங்க மூசிட
உவமை சொல வொணு தோங்கு விபவமாய்ச்
சிவபிரா னம்மை சிந்தை மகிழவே
(சாரிவந்தனர்.)

அமரர் பெருக்கமும் அறிஞர் பெருக்கமும்
விமல முனிவரர் விளங்கு பெருக்கமும.
கமல விருகர குவிதநுக் கனிவொடு
அமல குகவென வழுமோர் நெருக்குறச்
(சாரிவந்தனர்)

வேதவொலிமிக விளங்கு முழக்கமும்
வித்வ ஜனர் கவி விளம்பு முழக்கமும்
கீத விசைகொடு பாடி யாடிட
நாத வாத்திய முழக்க முழங்கவே.
(சாரிவந்தனர்)

இளமை யருணனே ரிலகு திருமுக
வொளி விளங்கிட மகுடமழகுற
தளவவிள நகைபிலக மெயிலணி
பளபளென வருள் பொழியவே.

(சாரிவந்தனர்)

தேவர் பூமழை சிறந்து பொழிந்திட
மூவர் நான் மறை முறைகள் மொழிந்திட்
ஆவலோடடியார்கள் மகிழ்வொடு
சேவை கண்டவர் வினைகள் கழிந்திடச்

(சாரிவந்தனர்.)

கலிக்கூற்று.

---

விருத்தம்.

மயிலேறுங் குமரர் சிவாசல விசாகர் வரும்பவனி காணவிக்
கலைத்து வாசங், கையிலேறு மலர்வாளி செந்தேனல்கக்
கைறுமாரனுக்குப் படையா மாதர், கயலேறும் விழிக்கணை
யுருவவில்லைக் காட்டியே விரகசுகக்கலகமூட்டி, மயலேறு
யானை யிரண்டுங்கூட்டி வருகின்றார் சிலம்பின் முரசறை
ந்தே.

மலைநாதர் பவனியைக்கண்டு பெண்கள் மோகங்கொள்ளல்.

கண்ணிகள் இராகம் பூரிகலியாணி தாளம் ஆதி.

குமாரனைக் குஞ்சரத்தின் வருமானைக் கலந்துவந்த
முருகோனைக் கலந்துவரு மொருகோடி மடவார்.
மறையோனென் பாரினனும் மறையோனென்றாற் கரத்தில்
வச்சிர வடிவேலுடன் செஞ்சேவலுமேதென்பார்.

திருமாயனென்பார் திருமாயனென்றாற் பன்னிரண்டு
திருநயனம் புயமுங்கையுஞ்செவியுமேதென்பார்
சிறையான விடைகலையீசனென்பா ரீசனென்றால்
தாறு தலையவனுக் காறுதலை யென்பார்.

அமரலோகாதிபதி யென்பாரிந்திரனுகில் வெள்ளை
யானையல்லா லாடுமயில் அவனுக்கேதென்பார்
பாலன் முதற்றேவரெல்லாம் இருபாங்கும் வருகையினால்
கர்த்தனிவன் சிவமலைமுத்தையனே யென்பார்.

ஒருகையினிலிட்டவளை யொருகைக்கிட மறந்தே
உதறுவார் சிறிது பெண்கள் பதறுவார் மனங்கள்
ஒரு விழிக்கு மையெழுதி யொருவிழிக்குத் தொட்டையு
மையுமாய் மனதினிற்பிரமையுமாய் வருவார்.

காலிலிடு முடையெனவே கரவிக்கையினைத் தொடுவார்
கச்செனவே யுடையை முலைக்கணியத் தலைப்படுவார்
சாலைநிறை வீதியினில் நில்லாரோ பெண்களுக்காய்ச்
சல்லாப வசனமொன்று சொல்லாரோ வென்பார்.

சரசகுண மாதருக்குவிரகப் பிணிக் கொருமருந்து
தாராரோ திரும்பித்தான் பாராரோ வென்பார்.
இரவு பகலுஞ் சுகந்தன் மார்பதனிலே யழுந்தி
இணங்காமல் நமக்கெனத்துக் கெழுந்தமுலை யென்பார்.

மோகினி வருகிற விருத்தம்.

மாலினிய மருகன் சிவமலையான் முன்போய்
வளைகலை நாணமுந் தோற்ற மடந்தையர்க்குள்
நூலின் மருங்கினி வயனி கலைவிற்பன்னி
நூபுரப்படாகச் சரணி சசிசமானி
பாலினிய தேன்வசனி வெகுநிதானி
பதுமினி சந்திரவதனி பசும்பொன்மேனி
சேலினிரு நயனி சுரஞானிமானி
செயவால மோகினிசபையில் வந்தாளே

தரு கேதார கௌளம் தாளம். ஆதி

பல்லவி.

சுகவால மோகினி சபையில் வந்தாள்.

அநுபல்லவி.

செகமோகன கலியாண சிவமலைக்காங்கய நாட்டில் (சுக)

கனக மோகனமாலை காதிற்கொந்தள மோலை
அனகன் சாஸ்திர சாலை பதிகபுண்ணியசாலை (சுக)
குரும்பைத்தனங் கிரீடம் கொக்கோகமுக பாடம்
அரம்பையர்க் கிவள் விசேடம் ஐங்கணை மதன்குருபீடம் (சுக)

திருநுதல் பிரபை துலங்க தேகங்கள் பளபளென
கரவளைக் கங்கண மணுங்க காலிற் சதங்கை கலகலெனச் (சுக)
நவரச நாட்டியங்களாடி நயகேதார கௌளம்பாடிச்
சிவமலைக் காங்கேயனைக்கூடிச் சேர்ந்துவிளையாட நாடிச் (சுக)

இதுவுமது.

இராகம் பயிரவி அடதாள சாப்பு.

சிந்து.

மலருமிளருருயிரும் வாரிசசொருகுங் கருங்குழலினாள்-அமிர்த
வாரியினிற் பிறந்த நாரியினுஞ்சிறந்த வெழிலினாள்.

எள்ளிளம் பூநாசிக் கேற்றவர்ண முத்துத் தளுக்கினாள்-பனி
யிளம்பிறை நுதலின்மேல யெழுது திலதவொளி விளக்கினாள்

கலையைக்காட்டிமானை யதுறக்தி மருண்ட கெண்டை விழியினாள்-சுகக்
காமப்பாலுகந்திசைந்த சீனிசாக்கரைக் கண்டின் மொழியினாள்.

முல்லையரும்பை முருக்கை முத்தைப் பழித்த வரிசைப் பல்லினாள்-மரு
முளரி விழிவண்டினைச் சாணின்முடிந்த புருவ வில்லினாள்.

திருந்த மதியழகு நிறைந்த முகக்கமலப் போதினாள்-புதிய
பொன்னூசலாடுமின்ப வள்ளைப்பிலைக் காதினாள்.

இளங்கமுகினிமேல எண்குரல் முழங்கிய சங்கக் கழுத்தினாள்-மாபி
லெவருங்காணில் மனதிலிசை கொளுந்திதலை யெழுத்தினாள்.

கழையைத்துளைத்து முத்த மாலையினையணிந்த புயத்தினாள்-தினங்
கசசிறுக்கினுக மேயி னிசசிருக்குமிரண்டு குயத்தினாள்.

பங்கயச் செங்காந்தள் மலரைப்பழிக்குமிரு கரத்தினாள் மெத்தப்
பாலைப்பொருந்தும் வடவாலிலைபோலு முதரத்தினாள்.

கொங்கை யமுதை யெறும் புண்க வொழுகும்ரோம பந்தியாள்-நீரிற்
குமிழி யெனவு மிகுந்தவர் சிந்தையுஞ் சுழிக்கு முந்தியாள்.

வர்ணச்சேலையை நெரிகைத்துடுத்திய துடி யிடையினாள்-இன்ப
மாரன் கொலுவிருக்குந் தேரின் தோரண வாழைத்துடையினாள்.

அனிச்சமலரீற் சிறு சதங்கை யலுங்கிய செம்பதத்தினாள் சொன்ன
வாகன் சிவமலையான் மோகித்திடுஞ்சரச விதக்தினாள்.

---

## வாலமோகினி பந்தடித்தல்.

### விருத்தம்.

ஐந்து பந்தோர் செப்புக்குளாடிய சிவாசலத்திற்
கந்தவேள் பவனி நாடிக் கழங்கொடம் மனையாடி
வந்தடி பணியு மின்ப வாலமோகினிப் பெண்மாது
பந்தடி யாடியாடிப் பாவனைபயில் கின்றாளே.

சிந்து, இராகம். கமாச. அடதாளம்.

பைங்குழல் வண்டு மதுமலருண்டு பறந்து பறந்தாட—வளர்
திங்கள வதனத் திருவிழிவண்டு திரண்டு திரண்டாட [சுப
கொங்கை மருமல ரினமெசண் டிரண்டுங குலுங்கியசைந்தாடச்
மஙகள கலியாணி வாலமோகினி வர்னபபநதடித்தனளே.

கொத்துமலர்ந்தசெதாங் கல்முத்துச் சரஙகள் குயத்திலணைந்தாட-வல
மதநுளதாள சங்கிதப் பிரபநத பரதவிதம் பாட
கைத்தலக் கந்துகந் தொந்தொமென் றெதுகை கண்டுலயப்போடக்-கண
உத்தம சற்குண வாலமோகினி யொருகை பந்தாடினளே.

தங்கவளை காகங்கண கேடயஞ் சரிசரி ரெண்டாடக்-கா
தணைடைபரிபுரங் கொலுசு சதங்கை சலீர் சலீரென்றாட
இங்கினியென்செய்வ தென்று மருங்கி னிழைஞர்க்குழைந்தாட-பஙந்
தங்க வங்கமெனும் வாலமோகினி கையல பந்தாடினளே.

ஞாலம் புகழும் பட்டாலிச் சிவமலை நன்னகர் வீதியிலே-மன
நாடிய சேடியர் தங்களுடன்கூடி நயந்து விளையாடி
கோலா கலசல் லாபவுல்லாசங் குலாவி நடமாடி-திவ்விய
கோகநகமுக வாலமோகினி கூர்ந்துபந் தாடினளே.

இதுவுமது.

### விருத்தம்.

நீர்க்குளம் வாவி கூப நிறைந்த பட்டாலியூரிற்
சீர்க்குண வால சத்தி சிவமலை வீதிதன்னில்
வார்க்குடமுலை பதைப்ப வாலமோகினி பந்தாடல்
பார்க்க நாலாயிரங்கண் படைத்திலன் வேதன்றானே.

தரு. இராகம். மோகனம் திரிபுடைதாளம்.

பல்லவி.

பந்தடித்தனளே—வாலமோகினி யிந்திரை போலவே—
பந்தடித்தனளே.

அநுபல்லவி

கொந்தலர் மலரின் குழல்களாடக் குழையிரண்டும் பொன்னூசலாட
சந்தரவதன வேர்வையோடத் தகுர்தித் திகுர்தி தகுர்தித்தோமெனப்
(பந்தடித்தனளே.)

முந்திய தோகண்கள் பிந்தியதோகைதி
ருந்திய தோவெனச் சிந்தைசெய் தேவன்னக்
கந்துக மோங்கி யடித்தடித்தாடிக்
கன்னியருடன் கூடிக்கூடிப் (பந்தடித்தனளே)

மகிமை ஞான முனிவர்தேவர்
வணங்கியே சிவமலையைப் பாடி
சுகுண சரச வாலமோகினி
தோதிந்தத் தோதிந்தத் தோதிந்தமென்னவே (பந்தடித்தனளே)

வாலமோகினி சிவமலை நாதரைக் காணுதல்.

விருத்தம்.

சிவமலை வீதிதன்னிற் செயவால மோகனாங்கி
நவமணிப் பந்தொன்றாடி நாலுபந்தாட் கொண்டாடி
மவுனமா யனேக ரூப வடிவுமா ஞான யோக
சுவன சித்தரெனும் விந்தைக்காரனை நேர்கண்டாளே.

ஐயம்.

தரு இராகம். பியாகடை ஆதிதாளம்.

பல்லவி.

விந்தைக்கா ரிவரா ரோ துரை

அநுபல்லவி.

கந்தசாமி யென்பவரோ (விந்தை)

சரணங்கள்.

கையினில் வடிவேலுங், குய்யகொடிச்சேவலுஞ்
செய்பவாய் மிலனுர் கண்டாற்றியங்காரோ—முரு
கையார் பங்கிலேற்குறக் கொடியல் குஞ்சரி யிருக்க
மையல் கொண்டென்னப தி மயக்கமா சம்மா

(விந்தைக்கார)

ஆறுமுகத்தழகு மார்பிற் சந்தனம் புனுகுஞ்
சேறாடி குங்கெதாழுகுஞ் செங்கடம்புங்—கன
மீறுங்குங்கும மெய்யுடை விண்ணவர்யாக்கும் வரங்
கூறுங் குரலை மொழிக்குழந்தை யென்றேவந்த

(விந்தைக்கார)

வணிகனென்றே வளையடுட்டி வளரியைச்சலையிற்கூட்டி
பணிந்தேத யவர்மூல விரகர்பாப்பாட்டி—இவர்
கலைசப்பார்க்கி லெங்கள் தனிசிவமல்ல யான்முன்பேபாய்த்
துணிந்தென் சொக்கின் மயங்கசொல்லக்கூடாதென்வெட்கம்

(விந்தைக்கார)

தோழிமார் சொல்லைக்கேட்டு வாலமோகினி மோகங்கொள்ளுதல்.

அசுரர் விகாதன் கண்டாயமருல கதிபன் கண்டாய்
வசதமா தேவர்க்கெல்லாம் வேலவரிவரே யென்றே
ஒசியினூலிடையின் மாத ரோதிய மதுர வின்ப
வசவால மோகனுங்கி மாதிவள் மயல் கொண்டாளே.

கண்ணிகள் இ. ம. சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

மாந்முக மலரானே—கமழ்—வார்கடப்பமலரானே
[illegible] செந்தேனே என்னை-மதிமயக்க வந்தானே
[illegible] வடிவேலழகுஞ்-சேவற்-[illegible] வடிவும்
கலகயிழ்ப் பெண்கள் மனதிரு[illegible] தாருகாதே

உருகுதையோ பரவசமாய் உடல்—ஒருவிதமாய் வருகுதையோ
விரகமென்ப திதுதானோ-இந்த-விதமென்று நானறிந்தேனோ
சரிவளையு மிழந்தேனே-பெற்ற-தாய் சொல்லையுமிகழ்ந்தேனே
உரியபணி பூணேனே துளி ஊணுறக்கங்காணேனே.

## கலிக்கூற்று.

### விருத்தம்.

முருக்கின் பூவிதழாள் வாலமோகினி விரையூரிற்
திருச்சிவ மலைவளை வேளர் தேரின்மேல் வந்தமேனமை
பெருக்கமுன் பெதிர் போய்க்கண்டு பேதைகண் மனதின்மையல்
உருக்கவே மதிமயங்கி உடையவிழ்ந்தயர் கின்றாளே.

## தோழிமார் ஆலோசித்தல்

கண்ணிகள். இராகம். எதுகுலகாம்போதி அடதாளம்.

வாலசுக மோக மானாள் சோகமேயானாள் பெத்த
வருந்தினாள் பூவினில் வீழ்ந்தாள் மயக்கமேறானாள்.
மாலையணி பூணாளொன்று மனதிலே தோணாள—சிவ
மலைவேள்பவனிகண்டாள் மருண்டாள் மதனையுங்காணாள்

என்ன பெருமூச்சிவளுக் கென்னமாச் சென்பார்-மோகன
எந்திரமோ வேளாகம மந்திரமோ வென்பார்
கண்ணீரொடு வெண்ணீ றெடுத்து மந்திரிப்பென்பார் —மசகமோகா
கைப்பிசகோ பேயோ பித்தோ சொற்பிசகென்பார்.

கோடங்கி குறிகாரர்களைக் கேளுங்களென்பார்-அம்மை
கோயிலிலே வைத்துத் தெளிவித்துப் பாருங்களென்பார்
கன்னியரெல்லாருமவளைக் கையைநெரிப்பார்—சந்தனம்
கஸ்தூரி குங்குமம் பன்னீர் கலந்து தெளிப்பார்.

ஐயோ தெய்வமே ஈதென்ன மாயமோ என்பார்—சிவமலை
ஆண்டவர் கண்பு[illegible]ஞாயமோ என்பார்.

## வாலமோகினியைப் பாங்கிமார் உபசரித்தல்.

### விருத்தம்.

ஆம்ப ருமறைத்தடாக மலசத்திர வீதிதோறுந்
தேன்பொழினிறைந்து வாழ்வு சிறந்த பட்டாலியூரில்
வான்பணி மாடந்தன்னில் வாலமோகனியைச் சேர்ந்து
மீன்பொரு விழியின்மாதர் வெதுப்புவார் குளிர்ச்சியாலே

கண்ணிகள் இராகம். ஆனந்தபயிரவி. ஆதிதாளம்.

### சிந்து.

சந்தன களபம் புனுகுபூசிப் பன்னீராட்டுவார்-சுற்றியிருந்து
தையலர் விசிறிவீசிவிரகத் தீயை மூட்டுவார்
பந்துமுலை விம்மிக்கூடுதே முகம் வாடுதேயென்பார்-மணமிகுமலர்ப்
பாயலில் வளர்த்துஞ் சேயிழையுடல் காயுதே யென்பார்.

தாள மணிகள் பொரிந்து நெரிந்தங் குதிருதேயென்பார்-தேகமுந்தனை
தருதுதே புலைமெழுகென மனதுருகுதே யெனபார்
பரசிவமலை முருகர் சுகித்த வாலமோகினி—ஒளிவிடுமுழுப்
பனிமதியனற் கினியவசனம் முனிவுகூறுவாள்.

## வாலமோகினி சந்திரனைப் பழித்தல்.

### விருத்தம்.

சதுமுகன்பூசை செய்யுஞ் சத்தி சிவாசலத்தின்
முதுமறை முதல்வை வேலர் முகமதியானுங்கண்டு
மதிமறந்தயர்ந்தே னுந்தன் மதியயக்கான தென்ன
விதமிது பிரமைதானோ விண்ணிலார் வெண்ணிலாவே.

கண்ணிகள். இராகம். ஆநந்த பயிரவி. அடதாளசாப்பு.

### கண்ணிகள்.

மனதொருதுளியு மதியெனா வளர்ந்துந்
தெய்வதாகிலனை மதியே—முழு
மதியமென்று லக்கலை குறைந்த வயனமும்பார்
களங்கமுஞ் சம் மதியே

வெண்ணில வென்பார் சிறந்த
மெல்லியர் நகைப்படுதும் வெண்ணிலவே—பட்சம்
விண்ண வருண்டது மல்லாமல்
விழுங்கிய திராகுவது வெண்ணிலவே.

வீரபத்திரன் பதிக்கப்படும
விமலர் சடைப்படுத்தியதுஞ் சந்திரனே குறைகள்
போகாதோ பூரணமுறுநாள்
பலதிதிக்குமச் சந்திரனே.

வெம்பிறையே மேலெல்லாம்
வெதுப்பிறையே மதியிளம் பிறையே. மதன்
அம்பிறைக்கும் வேளையிலே
யழலிறைக்க மனதுவெரும் பிறையே.

கலையே நீகான்முயலின் கூடா
கலையேமாதர் ஏசிறுபடுகொட் கலையே—காம
கலையும் பலகலையும் நிலையுங்
கற்றறிநருங் குருநாயகம் போக்கலையே.

சக்கு சிவமலையில் வளர்
சனமுக வேலாயுதனொரு பதியே—என்னைச்
சரசஞ்செய்து மருவிமுழுதுன்
னுரசென்றுசெய்யுஞ் சொல்லுமிப் பதியே.

வாலமோகினி கடலை நிந்தித்தல்.

விருத்தம்.

கடகரி முகனைத்தந்த கன்னைக தூடிய சிவாக்கிரிக்
கடவுளைக்கண்டேன் சிந்தை கலங்கிப் பிரமையாலே
வடவனல் போலவெந்து வாடிய கோட்டியாலே
யுடல் பரவசங் கொண்டோசை யொலிக்கடலினை வைவாளே.

இராகம் புன்னாகவராளி. தாளம். ஆதி.

கண்ணிகள்.

மங்கையர் மேலலை மோதியொலிப்ப தென்ன வாரியே-உண்ட
வனைகுயினை மறந்தாயே மலைமுனி யுனைக்கை [illegible] வாரியே
மகாமேரு கொண்டுமுதன் வானவர் கடைந்ததை நேரியே-திரு
மங்கையாலங்கையின் மட்டுஞ்செய்த பந்தனத்தை தேமியே.

கண்ணியலோர் வேலைகாட்டியு மாதர்கள் வேலையே சொல்வார்
கரலையல்லா தொருகாலை யுனக்கில்லை வேலையே.
விழியம்பு ராசியர் காதளவு மம்புராசியே—செப்பால்
மெத்தவுதாசின மென்றுபுகல்வா ரம்புராசியே
சத்தி சிவாசல சண்முகர்தா ளதிபதியே—சேர்ந்து
தயவு செய்வாரென சிநேகரநேக நதிபதியே.

## வாலமோகினி தென்றலை நிந்தித்தல்.

### விருத்தம்.

பாலிரச மென்னு மொழி நல்லமங்கை
பயின்ற சிவமலை முருகர் பவனியாலே
மாலிரதி மதன்பிடித்த குடைபோதாதோ
வாரிமுர சதிர்வகையால் மயல்மீறாதோ
சேலின் விழிமாதர்கள் மேற்கொடுமை போதோ
தென்பொதி யத்திகிரியிலே செழித்த தென்றற்
காலிரத மேடுவிமேல வந்து காமக்
காரியமென் வீரியமென் கழறுவாயே.

### இராகம் நவரோசு அடதாளம்.

பல்லவி.

வந்தவிதமென் மந்த மாருதமே

அநுபல்லவி.

கொந்தலர் மணங்கொணர்ந்து-சந்தனப் பொதியதிருந்து (வந்தவித)

சரணங்கள்.

வசந்தமாய் வீசுறாய் வசந்தமாய்ப பேசுறாய்
கசந்துமாத ரேசுறார் காலிலாநிலாக் கூசுறாய்

முரசின் வாரியி னிடமே முன்பிறந்து முன்சடமே
அருவமாகிய மடமென்—அல்குல் நாகமுனையுண்டிடமே
மெலியுமடவார்காய—வேள்கணை செயுஞ் சகாயம்
புலிபோல் தாவு கின்றாய்-போகுமோவுன் சம்பிரதாயம்

புனைமொளாம் பணியப்பூசிய பரிமள மெய்யர்
சிவகிரி மூநகையர் சேர்ந்தானுன்றோ லெனையென் செய்ய
வந்ததிதமென்.

### வாலமோகினி குயிலை நிந்தித்தல்.

கலிப்பா.

பூவின் மணம் பாவின் மணம் பொருந்திய சந்தனவரையின்
மேவிவருநா புலிபோலே தாவியதென் றலையிகழ்ந்து
பாவிதர் நிறைந்த சிவமலைவாலமோகினியாள்
கூவு கருங் கோகிலத்தைக்கூர்ந்து மொழிகூறுவளே.

தரு. இராகம்—பூபாளம்—ஆதிதாளம்.

பல்லவி.

கோகிலமே தொனி கூவினுமே விரக

அநுபல்லவி.

விபரகுல மன்மதனுக் கிதாகு-மநுகூலமே (கோகிலமே)

சரணங்கள்.

என்குறவிநேறியும் பெண்கள்சொலும் பயிலும்
பண் புகலுமியலும் பழகுநந்தலை முறையிலும்
கோகிலமே.

உன்னிட நிறங்காளம் என்றாதுவன் மதனைக்காளம்
எனனசொல்வேன் பூபாளம—இல்லையுன் மனந்தயாளம்
கோகிலமே.

திங்களனலைத்தூவத் தென்றல் புலிபோல் தாவ
ங்கள் சிவமலையாருவல்—எண்ணி என்மனம் நோவ
கோகிலமே.

### வாலமோகினி மன்மதனைப் பழித்தல்.

விருத்தம்.

வித்தகர் சிவாசலத்தில் விளங்கிய குமாராசை
நத்திவா வாலமோக ஞகி யென்றரூபமான
கைத்தலக் கரும்பு வில்லுங் கணைமலரைந்துங் கொண்டு
சித்தச னெயிலாய்த் தென்றற் றேரினில் வரக்கண்டாளே.

இராகம் ஆனந்தபயிரவி ஆதிதாளம்.

பல்லவி.

பஞ்சபாணா நீ பேசாமற் போடா—மோக

அநுபல்லவி

வஞ்சியர்கள் விழிவண்டேந்தன் விரிவில்லுக்கு நாணல்லடா (பஞ்சபாணா)

சரணங்கள்

ஈசுரன்மேற் பூச்சரங்கள் தூவி நீதான்
என்னபலன் கண்டாய் பாவி
இழந்துபோன வுடல ரூபி (பஞ்சபாணா)

கதிர்மதிவெண் குடையதுவுஞ் சூனைச்—சிறு
கண்ணியரோ வெல்லுஞ் சேனை
கைவல்லிய மோவிரு ளானை (பஞ்சபாணா)

அரைத்தேரினா னென்றுதெரி யாது—நீயீ
ரரைக்கால் தேர் கொண்டெனைப்பகைக்க வாராது
பெண்பழிபோ காது (பஞ்சபாணா)

செல்வப் பட்டாலியிற் பால்வண்ணர் பாலன். சத்தி
சிவமலையில் வேலன்-முன்பு
முன்பு செல்லடா (பஞ்சபாணா)

பாங்கி வருதல்.

விருத்தம்.

மாங்கனிகள் மலர்கள் வரவழைத்த சத்தி
மருவு சிவமலைக் குகன் காங்கய நன்னாட்டிற்
கோங்கின் முகிழ்முலை யிரண்டுந் தாங்கி யேங்கிக்
கொடியெனவொல்கிய மருங்கி குலவுத்தங்கி
தாங்கிடதத் தோங்கியெனுஞ் சதியை நோக்கித்
தான்சுர முழங்கிய சங்கித சாரங்கி
வாங்கி யிருகையில் வீணை பயில் சாரங்கி
வச்சிராங்கிப் பாங்கியிதோ வருகின்றாளே.

இராகம். நாகவராளி. ஆதிதாளம்.

பல்லவி.

பாங்கி வந்தாளே வாலமோக
னாங்கிமுன் பினிலே சிவகிரி.

அநுபல்லவி.

காங்கயன் சபையிற் சனகயதேசி பாடிப் (பாங்கி)

சரணங்கள்.

வாணுதலில் திலத மின்னையிடையிலொட்டி
யானைமதப் பளப பொன்னை பறக்காசைத்
துணியாங்க சங் பின்னலை
தொடர்ந்திரு கால்கள் பின்னப் (பாங்கி)

கொங்கைக ளிரண்டிங் குலுங்க—பின்னற் சொருக்கில்
குப்பி முத்துத்தொங்க லலுங்க—பங்கயச்
செங்கை வளைகள் கிலுங்க
சிலம்புகல கலென்கப் (பாங்கி)

வாருடன் மலர்கள் சூடி—நடைபாடிக்
கோகிலம் போற் கதி கூடி. சத்திசிவ
நாத வேலவரைத் தேடி
நாக வராளிகள் பாடிப் (பாங்கி)

## வாலமோகினி தான்கொண்டவிரகத்தைப்பாங்கியுடன் சொல்லல்.

விருத்தம்.

விரதவர் நிரம்பிய பட்டாலி யூரில்
மேவு சத்தி சிவ சைலபதிதன்னில்
இரத மிசைக்குறமகள் குஞ்சரி சமேத
னெழுந்தருளும் பவனிகண்டு மதிமயங்கிக்
கரவளைகள் நெரிந்து குழல் சரிந்துவர்ணக்
கலை நெகிழ்ந்து காம வெறிதலைமேலேறிச்
சரசகுண சுகமால மோகனாங்கி
தன்விரகஞ் சகியுடனே சாற்றுவாளே.

இராகம். புன்னாகவராளி. அடதாளம்.

கண்ணிகள்.

விண்ணுலகாதிபர் சிவமலையான் மீதி லாசை—நான்
எண்ணியவாறும் வயணமும் நீ கேளாய் பாங்கி
கண்ணீராய் வருங் காங்கய நாட்டைக்கண்டேன்—மிகு
தண்ணீராய் வருதென்னிரு கண்டுபொரு தாதே.

தோகை மயிலின் துரை முருகேசனைக் கண்டேன்—என்
ஆகமுருகி யனல் மெழுகானே னிப்போதே
வாகன வள்ளிமணாளனை வீதியிற் கண்டேன். என்
மோகன மாலையும் முத்துஞ்சிதற விட்டேனே.

குழந்தை வடிவாய்க் குமரர் வரவு கண்டேனே. முன்பு
குளிர்ந்த மதியுங் கொடுங்கனலாக்கிக் கொண்டேனே
தெளிந்த மதிமுக மாறுய் வந்தாரை நான் பார்த்தேன். மதி
யிழந்து மருங்கில் கலைவளை நானுந்தோற்றேன்.

பால் வண்ணர் பாலன் பரஞ்சுடர்ச் சோதிமுன் போனேன்—போயென்
மேலுங் கறுத்து வெறுத்தேனப்பாலுந் தேனே.
மாலைகடம்ப மலரணியுந் திருமார்பும்—கையும்
வேலினழகுமென் விழியை விட்டேவிலகாதே

சத்தி சிவாசலர் முத்தய்யர் முன்பு நான்போனேன்—மலர்
மெத்தையில் நித்திரையுஞ் சத்துருவாக்கிக்கொண்டேனே
பத்தர் பணிபட்டாலிச் சித்தரென்றே யறியேனே—திருப்பிப்
பார்த்த விடமெல்லாந் தோற்றுதவரைப்போற்றுனே.

இதுவுமது.

கலிப்பா.

தானே கழுங்கமனை சந்தனம் பன்னீராடேன்
கானே ரிசைபயிலேன் கைக்கிளியுந் தோற்றுவிட்டேன்
தேனூர் கடம்மணியுஞ் சிவமலையில் வேலர்மயன்
மானே அரைநிமிடம் மனது சகியேனே.

இராகம். நீலாம்புரி. ஆதிதாளம்.

பல்லவி.

சகியே நானினி விரகதாபஞ் சகியேன்—அரை
நிமிஷம் சகியேன்.
மகிமைசேர் சிவமலையில் வளர்வடிவேலாயுதன் மீதிலாசை
சகியே.

சரணங்கள்.

சொருகுங் குழலுஞ் சோருதே
துயிலிழந்துமத மீறுதே
அரவின்மதசல மீறுதே
ஆசைப் பேய்தலை சுற்றுதே (சகியே)

அன்னை யென்னைவைய லாச்சே
ஆசையாலென் வெட்கம் போச்சே
என்ன சொல்வேன் பெருமூச்சே
எண்ணி எண்ணி மனதும்புண்ணாச்சே (சகியே)

தாய் வயிற்றிற் பிறந்த நேரந்
தலையிலயன் விதிப்பிர காரஞ்
சேய் சிவாசல னென்னோரஞ்
சேர்ந்திடச் செய்வாயுப காரஞ் (சகியே)

## வாலமோகினியைப் பாங்கி பழித்தல்.

விருத்தம்.

வனக்குயி லினம்போல் வந்த வாலமோகினிப்பெண்மாதே
உனக்கென்ன பிரமைதானோ உரைத்திடு வயணந் தேரா
புனக்குற வள்ளிக்காசை பூண்டுமுன் வேங்கையென்ன
வனத்தினிலு நின்றவர்க்கா மனத்தினில் மயல் கொண்டாயே.

## வாலமோகினி சிவமலைநாதரைப் புகழ்ந்து பாங்கிக்குக் கூறல்.

இராகம். காம்போதி தாளம்.

கண்ணிகள்.

சத்தி சிவமலையான் சேதிமெத்த மெத்தவுண்டடியோ—மானே
சத்தியைக் கைபிடித்தவர்க் கெத்தனைபெண் மோகித்திடார் மானே.

உத்தம வரம்பையரும நிர்த்த மிடுவார்கொலுவில் மானே
அத்தனைக்கண்டே ரிஷிகள் பத்தினிமார்கற் பழிந்தார்மானே—யவர்.

பத்தர்களுந் தவவிரதத்தர்களு மாசைகொண்டார் மானே துரை
முத்தயன் பதத்தைநானோ நத்தினேன் சொல்மானே.

இதுவுமது.

விருத்தம்.

கொங்குமண் டலத்தினி லுயர்நாட்டிற்
கோட்டமோரேழு நடுக்கோட்டந் தன்னிற்
றங்கிய வெண்கிரி நதியோரிரண்டு தான
தருமமுயர் கிராம மதோ பன்னிரண்டு.

மங்களதேவத்தானம நேகமாகு
மாசொரு மூன் றுள திருக்காங்கெய நன்னாட்டில்
விண்கவர் சிவாசலர் மீதாசை கொண்ட
மெல்லியரில் நானொரு மெல்லியல் கண்டாயே.

பாங்கி வாலமோகினியை நியாயம் வினவுதல்.

விருத்தம்.

முத்தெனும் நகையார் வாலமோகினி பசப்புவார்த்தை.
மெத்தவும் படித்துக்கொண்டாய் வேலர்மீதாசை பூண்டாய்
சகதி சிவாத்திரி வாசர் தப்பாா நந்தருண்மேல்.
நத்திடக்கரும மேதோ நங்கை நீநவிலுவாயே.

வாலமோகினி பாங்கிக்கு வருந்திச்சொல்லுதல்.

இராகம். சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஏழிசையமுதுண்டு தாள மிசைத்துப்பாடிரு—எண்ணிருகலைய்
வாள்விழியமுதுண்டு நயத்தில் மருவிக்கூடிலார்.
வாளக மீனவன் கூனைநிமிர்த்தி வெப்புதீர்த்தவர்—மங்கையர் கொங்கை
மதயானையை யமுத்திவிரக வெப்பைதீர்த்திலார்.

பரத்தின் பொருளை யகத்தியற்குபதேசித்திடுகுவார்—மோகமந்திரப்
பாவையற்குப தேசித்து தினை நேசித்திடுகிலார்.
அரிக்குயார்க்கும் பிரமனுக்குங்குரு முறைகாட்டுவோர், அரிவையர்க்குமே
ஆசைகாமக் குருவின்பமது முறைமை காட்டிலார்.

பாவர்தீர்க்க பட்டாலிச்சிவ ஞானமருவார்—ஆறேனுந்திருப்
படைவீட்டிலு மருவார்மதன் படையை மருவிலார்

தேவகுஞ்சரி கைப்பிடித்தே வள்ளி காலைப்பிடித்தனர்—இருவரைகூர்ந்து
சித்த மிரங்குவர்யார்க்கு மெனக்கிரங்கிலார் கண்மணே.

## வால மோகனுங்கிக்குப் பாங்கி புத்திசொல்லுதல்.

### விருத்தம்

மின்னு செம்பொன் சிவாத்திரி வேலர் மீதாசைபூண்டு
சொன்னவர்க் கிணக்கமில்லாத் துணிவு நீகற்றுக்கொண்டாய்
என்ன நான் வெகுவிதத்தி னியம்பினுங் கேளாய்மாதே
இன்னியுன் மனதினின்ப விச்சையை யியம்பிடாயே.

## வாலமோகினி பாங்கியைத்தூது அனுப்புதல்.

தரு. இராகம். சகாணு ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லி வருகுவாய் தூதே. மாதே
நீதானிப் போதே.

அநுபல்லவி.

செல்வச் சிவமலையான்ம திக்கத்
தேவர்சபை ரஞ் சிக்கச் (சொல்லி)

சரணங்கள்.

கண்ணில் நித்திரையும்வ ராதே—அவரையாருங்
காயக்கஞ் செய்யவுந்தீ ராதே—இரவுபகல்
எண்ணியனம் புண்ணுய் நோகுதே. துரைசாமிக்
கெந்த விதத்திலும் பஞ்ச தந்திரவிதத்திலுஞ்
சொல்லி.

என்னடி ஆசைக்கு ரோசம் இலைப்பெண் ஜன்மம்
எடுப்பதாவும் பிர யாசம் இதுவயணம்
அன்னையறிந்தாலும் மோசம் என் மேல்மன
தன்கிரங்க விசுவாசமாகவே மோகவிசேஷம்.
சொல்லி.

வாரொமென்றுற் பதின மின்றே—வருவாரென்று
வாங்கி வந்தாலும் நன்றே—பட்டாவிபூரில்

ஆர்துணையுன் றுதா வென்றே—இனமும்வள்ளி
ஆறுமுகன் பாதத்துக்கு றாறுசலாஞ் செய்தாளென்றே
சொல்லி.

வாலமோகினி சிவமலைநாதர் சமயத்தைப் பார்க்கிச்சொல்லல்.

விருத்தம்.

அவ்வேளைக்காய்ந்த பூால் வண்ணநாதர்
அருள்வேளைக் காணவெண்ணு தமரர்கூட்டம்
எவ்வேளையிலு முனிவர் சித்தர்சங்க
மிடைநீக்க மில்லாமலிருக்கும்வேளை
மூவ்வேளையிலுஞ் சிவமாமலையில் வந்து
மும்மூர்த்திகளும் பூசைமுடிக்கும் வேளை
செவ்வேளைக் காண்பதற்கு நல்லவேளை
செவ்வேளை யிவ்வேளை தெரிசிப்பாயே.

இராகம்-புன்னுகவராளி. அடதாளசாபு.

கண்ணிகள்.

சத்திசிவ மலையார்க்கு நித்திய மாறுகாலம்
ஸ்தபன சிவருத்ரகும்பாவபிஷேகஞ் சகியே
சத்திலிங்கபூசை யிருபத்தெட்டாகம மந்திர
ஷடாக்ஷரவுருச் செய்வ ராதிசைவமறையோர் சகியே.

மெத்த மறையோர்கள் வந்து வேத சுதிமுழங்கும்
வேதாந்தமுஞ் சித்தாந்தமு மிகவிளங்குஞ் சகியே
உத்தம காசிபரிஷிபூ சித்த முருகேச
ருத்தமபட்டன பூசையிலுகந்திருப்பார் சகியே.

கோல கலாபமயில் லோலனுக்குற வள்ளி
குஞ்சரியுங் கணபிரியாள் கொலுவி னிருப்பார் சகியே
வேலோர்க்குக் கந்தைலஞ் சந்தனத்தின் கூட்டுபுனு
வில்வக்குழம்புங் கரும்பின்பாலும் விருது... சகியே

பாலாறும் நெய்யாறுந் தேன்பழஞ் சர்க்கரையும்
புலவின் சுளை மாங்கனிபல் பழமிளநீர் சகியே

மேலான தீபதூப சோடசவுப சாரம்
மிகமேலா நிற்காமல் நடக்குமடி சகியே.

மத்தமதி சூடியபால் வண்ணர் திருப்பட்டாலி
மாநகர் காசியபகோத்திரன் பழனியப்பன் சகியே

புத்திரர்சிவ கிரிபண்டிதர் பூசைபுரி நாயனும்
பொற்பணியலங்காரஞ் செய்வான் சிதம்பரையன் சகியே

சுத்த வன்னம் முதலான நைவேதனஞ் செய்வான்
சுவாமிக்கன்ன சத்திரத்தின் வள்ளியப்பன் சகியே

பத்தியுள்ள ராயப்பனைக் கட்டளைநந் தாதீபமும்
பார்த்துக்கொண்டகி லாண்டையன் காத்திருப்பான் சகியே.

நித்தியபடி பருவதிதிமா தப்பிறப்பமாவாசை
நேம சோமவாரஞ் சுக்கிர வார தினமுஞ் சகியே

முத்தயற்கும் குறவள்ளிக்குந் தைப்பூசத்திருநாள்
முகூர்த்தமொரு பத்துநாளு மணக்கோலஞ் சகியே

நாட்டுக்கணக்குப் பட்டாலிநகர் மாண்டவியகோத்திரன்
நளினமார்பன் தாத்தையன்சொல் பாலன்வருவான் சகியே

பூட்டு பணியாபரணம் பொன்சர நவரத்நம்
பூஷண விசேஷதினம் புனையும்வகை சகியே.

சித்தர்களும் யோகிகளும் முத்திபெற யமூர்த்தசஞ்
சீவி வேண்டிமலை சுற்றியு மேவியிருப்பார் சகியே

பத்தினிப் பெண்சடைச்சியம்மாள் பதினெட்டெனும் புராணப்
படிபதினெட்டாம் படியினிற் குடியிருப்பாள் சகியே.

இம்முடிக் குமார காங்கெய மன்றாடி ராசன்
இருவேளை யுந்தரிசிப்பார் துரை முருகவேளைச் சகியே

உண்மையுள்ள ரணவிஜய துரைநலதம்பிச் சர்க்கரை
உத்தமக் காமிண்ட மன்றாடியார் மண்டகப்படி சகியே

தன்மதுரை சிங்ககச்சிதம் பரப் பல்லவராயன்
சந்தி திரி சந்தியிலும் வந்துபணிவார் சகியே

செம்மைத்திருக் காங்கெய நன்னாட்டார்வந்து கூட்டந்
தெப்பக்குளத்திற் கந்தர்க்குப் பூந்தோட்டஞ் சகியே

சந்திரமுகயர்னை யூடல் தீர்த்துத் தரிசிப்பார்
சம்பந்த நகராயிரவர் சாந்துக்கட்டளை சகியே
அந்தி பகல் வுள்ளிட்டுவன் சந்ததிப்பரி சனங்கள்
அநேக வாத்திய கீத நிர்த்த மாடிநிற்பார் சகியே.

கந்தர் பள்ளியறையில்வள்ளி குஞ்சரியைக் கலந்தே
காலையிற்றிருக்கோயில் புகுமேகாந்த சமயஞ் சகியே
அந்தவேளையி லவருடனே எந்தன் மாலைச்சொல்லி
யவர்கடம்பமாலை வாங்கியருள் வாயடி பெண்ணே.

## பாங்கிவாலமோகினியைத் தேற்றுதல்.

### விருத்தம்.

சத்தி சிவமலை முருகர் மையலாலே
தயங்கிய பெண்வால சுகமோகனாங்கி
சித்தமுறு மெழுகெனவே யுருகல்கண்டு
சித்தாங்கி பாங்கியவள் மனதைத்தேற்றி

பத்துவகையாகவுமே ஆதுதைத்துப்
பரவசமாய வரையுன்கை வசமேசெய்வேன்
மெத்தவும் நீமனம் வருந்த வேண்டாமென்று
விள்ளுவாள் விதனமெல்லாந் தள்ளுவாளே.

இராகம். தோடி. தாளம். ஆதி.

### பல்லவி.

மானே வருந்தவும் வேண்டாஞ் சொன்னேனே நானே

### அநுபல்லவி.

தேனார் கடம்பணியுஞ் சிவமலைக் காங்கேயர் வருவார் (மானே)
எநதிரமோ காமகலை மந்திரமோ இந்திரஜாலத்
தந்திரமோ அவருடைய
சிந்தையை அறிந்துவாரேன் (மானே)

யோக்கியமு மதிக சிலாக்கியமும் சகல சௌ
பாக்கிய மென்மேலும் வரும் பஞ்சாங்
மானே.

தெய்வபல முனக்குண்டு சேடிய ரெலாருந்தொண்டு
செய்கவரு வார்திரண்டு சிந்தையின் மகிழ்ந்துகொண்டு
மானே.

தோத்திரங்கள் செல்வி நல்ல பாத்திரமிவளென்றழைய
மூர்த்தியை அழைத்துவாரேன் பார்த்திடு சாமார்த்தியந்தனை
மானே.

பாலுந் தேனுங் கலந்தாப்போலப்-பட்டாலிச் சிவமலையில்
வேலவரையநேகவிதமாய் வேண்டிக்கூட்டித் தருகின்றேன்
மானே.

வாலமோகினி * கூடலிழைத்தல்.

கொச்சகம்.

கொங்கை மெட்டியாளுங் குமர காங்கெய நாட்டிற்
பொங்கிய பட்டாலிப்பூதர சிவாசலத்தில்
கங்கை சுதன் குகனைக கண்டசுகவால
மங்கையிரதி மதசனதமர்ஞளே.

இராகம். சங்கராபரணம். தாளம் ஆதி.

சிந்து.

ஆரணப்பொருளாகிய நாயகர் ஆகம மந்திரமோகனநாயகர்
ஐந்தருவினுக் கதிபதிநாயகர் அமரர்கள் பரவக் [வர்
கூரயில் வடிவேலினைப்பிடித்தவர் கொடியகிரவுஞ்சகிரியினைத் துளைத்த
குகசிவ கிரியினர் கூடுவாரெனிற் கூடலே கூடாயோ.

அஞ்செனுமெழுத் தாறெழுத்தானவர் ஆதிபரை கங்கைபாலகரானவர்
அரியரபிரம குருவடி வானவர் ஆறிருகரத்தர்
குஞ்சரி வள்ளியை நேசித்தநாயகர் குறுமுனிக்குப தேசித்தநாயகர்
குகசிவ கிரியினர் கூடுவாரெனிற் கூடலே கூடாயோ.

---

* கூடலிழைத்தலாவது:—விரகங்கொண்ட பெண்கள் பூமியிலே மணலைப்பரப்பி, கண்களை மூடிக்கொண்டு தம்முடைய நான்கு விரல்களையுமடக்கிச் சுட்டுவிரலால் வட்டமாகக்கீறி, கீறும்போது ஊன்றிய இடத்தில் சுட்டுவிரல் நுனிவந்து பொருந்துபதாவென்று பார்த்தால், அங்ஙனம் பொருந்துவது நாயகன் வருவானென்பதற்கும், பொருந்தாதது வரமாட்டானென்பதற்கும் அறிந்துகொள்ளுங்குறி.

## குறிசொல்லுங் குறத்தி வருதல்.

விருத்தம்.

அறிவகை புணர்க்குறி புனைந்துரைப்பதற்க
வாதாரக்குறியாறு மடைந்தாய்ந்தேயாகமும்
உறிவகைச் செப்பன்னிருகாற் குறிகாணுன்கீற
உற்றகுறி மற்றகுறி யுரைபமைப்பமென்று
வெறிவகைக்கு மருந்து மூலிகை பரிந்து
மேலான சிவமலை முத்தயா வினைப்பட
குறிவகைகளை வாகட்டோகணிக்கச் சொல்லக்
குறவஞ்சி திறவஞ்சி வருகின்றாளே.

இதுவுமது ஆசிரியப்பா.

சீருறு மலையுந்திருவேரகமுந்
மாவிலங்கையு மேலைப் பெருந்துறையும்
வெள்ளிமலையும் பழமுதிர் சோலையுந்
திருப்பரங்குன்றமும் பொருப்பியல்பமைந்த
ஓங்கறு வீட்டுச் சிறுகாவேரிக் கோட்டுறு
கூந்தலிற் சொருக்கும் காந்தியிற் பெருக்கும்
திருந்துதற் பொட்டும் வரிவிழிச் சாயமிட்டும்
தொழிற்கொரு பகட்டும் பொழிநகைதொருமிடமும்
நடையணம் பழகவிடைக் குழைகதிர்க்க
வார்முலையருந்து மாரப்பிணிற குருந்து
தாங்கிய தொட்டியும் காங்கிணிற சட்டியும்
மிடைக்கும் சாடையும் மிடுக்கிய நடையும்
மருசலின் வாடையும் ரஞ்சிதச் சாடையுஞ்
செசகசை மாலிகையும் மெசசமூலிகையும்
கண்குன்றிமணியும் புன்னயக்குமணியும்
மனுக்கிய துலுக்கும பனுக்கிய பிலுக்கும்
பசப்பிய பயிலு மிசைக்குரலியவிசல
பயிரவிபாடி யொயில் நடமாடி
யேர்திகழ்யாருக் கிடந்துகை நோக்கி
வாய்ந்த வாடவர்க்கு வலதுகை பார்த்து
நேத்திரத்தாலுஞ் சூத்திரத்தாலும்

பார்த்திடக்கையின் மாத்திரைக்கோலும்
பிணிவகை தீர்க்கக் கணிகுறிபார்க்க
அடிக்கடி மெட்டி உடுக்கையைக்கொட்டி
மெய்க்குறி வெல்ல கைக்குறி சொல்ல

உலகெலாந்துதிக்கக் கலைவலோர் மதிக்க
எக்குறிப்புடன் முன் சக்களத்தியின் மயல்
வெறியெனத்தெரிந்து குறவனைப்பிரிந்து
மின்சிவ மலைக்குற வஞ்சிவந்தனளே.

தரு. இராகம் சௌராஷ்டிரம். தாளம், ஆதி.

பல்லவி.

வஞ்சி வந்தாள் சிவமலைக்குற
வஞ்சிவந்தாள்.

அநுபல்லவி.

பஞ்சின் மெல்லடியின் சதங்கை
மிஞ்சுஞ் சுதிகள் முழங்கவே
குஞ்சரி வள்ளியையு மஞ்சலிகள் செய்தி
றைஞ்சுதுரை முருகன் சிவமலைக்குற (வஞ்சி)

சரணங்கள்.

பஞ்சவர்ணத்துகிலுங் கெஞ்சுங்குறப் பயிலும்
பசப்பிலாறையும் வெல்லவே
செஞ்சி தஞ்சைநகர் மதுரை மைசூர்
டில்லிவரையுங் குறி சொல்லியே குற (வஞ்சி)

அஞ்சன மைத்திலத மோகனத் தயிலம்
அட்டவசிக மூலிகை கட்டிவே
மஞ்சணை மார்பிற்கட்டி மாத்திரைக் கோலைக்காட்டி
வள்ளிக்குறவனைத் தெட்டியே குற (வஞ்சி)

வாடைய்யு மன்மதராதி சாடையுங் குன்றின்மணி
மேடையுந்தலையிற் குறக் கூடையுமாய்
பேடையனங்குலவு மோனடயின் மரகத
மேடையுயர் காங்கெய நாடையுமுடைய குற (வஞ்சி)

ஆடகக் கங்கணமுஞ் சூடகமுஞ்சரியு
அக்குமணிவடமு மமுர்த கொங்கைக்குட்டமும்
வேடுவர் குலத்தொழில் விசேடமு மவர்க்குப்
பாடமுந் தமிழி னுடகஞ்செய் குற (வஞ்சி)

உவமையிலரம்பையர் பின்னுருவசியென் கைபின்னே
அவளுஞ் சமதைசொல்ல இவள் கணிசம்
அவனியெங்கணுஞ் சுற்றி யம்மே யம்மே யென்றெற்றி
நவநிதி ஞழ்பட்டாலி நன்னகர்க்குறிய குற (வஞ்சி)

பவளவித ழிரச திவலையெவள வெனுங்
கவிழ விரகர் மனந்தவிழ இடைதுவள
மவுன முனிவர்க்கென்று கவனகுளிகை கொண்டு
புவனம் பரவுந்தவ சிவமலைக்குரிய குற (வஞ்சி)

கவிக்கூற்று.

கொச்சகம்.

அகில் கமுகு தென்னைபலா வாரமு மந்தாரமுமாய்
பகலவனை வெயின் மறைக்கும் பட்டாலிமா நகரில்
முகிலனைய குழல்வால மோகினிமுன் குறமாது
மகிமையுள சிவமலையான் வாசல்வளஞ் சொல்லுவளே.

இராகம். சங்கராபரணம் அடதாளம்.

ஐந்தருவின் பந்தலின் செங்கதலிபைங்கரும்
பலங்கரித் தேயதிற்
சந்திர நந்தாதீப மந்தி பகலுந்
தபனனுந்தா னிருசுடர் விளங்க
சுந்தரஞ்சேர் குறவள்ளி குஞ்சரிக்குஞ்
சோபனஞ்செய் வாசலிது அம்மே.
மந்திரசைவாகம வேதாந்த
மறைமுழங்கும் வாசலிது அம்மே.
சந்தனம் பன்னீர் குங்குமங்கலந்து
தான் தெளிக்கும் வாசலிது அம்மே.
மந்திர சைவாகம வேதாந்த
மறைமுழங்கும் வாசலிது வம்மே.

நீர்பரவும் பாமுனிவோர்சுரர் நிறைந்து நிற்கும் வாசலிது அம்மே
பேர்பெருகுஞ் சுராமுகத்தோன் வந்து பெருமைபெற்ற வாசலிது அம்மே
இந்திரனுஞ் சியும் வந்தேதினமும் இறைஞ்சி நிற்கும் வாசலிது அம்மே
அந்திபக லாநந்த நடங்க ளாடிநிற்கும் வாசலிது அம்மே

வேசியரும் மாதிசைவரும் வரங்கள் வேண்டிநிற்கும் வாசலிது அம்மே
ஆதிபரமேசுரர்க்கு மந்திர மருள்புரியும் வாசலிது அம்மே
சிரா யீராருமேதுதி செய்குகின்றருட் வாசலிது அம்மே
நாரியரும் அரம்பையரும் தினமுமநடம்புரியும் வாசலிது அம்மே

ஆடரவும் ஆசயமுந்துதித்தே அன்பர் நிற்கும் வாசலிது அம்மே.
காரணமா வர்கள் மெய்த்தமிழைக் கனிந்து சொலும் வாசலிது அம்மே
நக்கீரர் தமிழுரைத்தேமிக நலம் பெருகும் வாசலிது அம்மே
பெரிப்படனே அருணகிரி திருப்புகழ்பாடிக்கும் வாசலிது அம்மே

வந்தவினை வல்வினை யுக்கவிர்த்து வாழ்வுதரும் வாசலிது அம்மே
அந்தமுற்ற ரகைமயில் க. ள மாற நிற்கும் வாசலிது அம்மே.
அம்பிகையுமய சரணரு மகிலைக் கருணைசெய்யு மவாசலிது அம்மே
கொம்பனையாள் குறவள்ளிக்கே மணக்கோலஞ்செய்யும் வாசலிது அம்மே

அங்கட க க்குமி பேரிகைபல மதிர்க்க நிற்கும் வாசலிது அம்மே
விந்தையுள்ள கருவிகொணி மிகமுழங்கும் வாசலிது அம்மே
மானமுமா வாசலிது விமானமுள்ள வாசலிது வம்மே
ஞானமுள்ள வாசலிது நவரத்னமுள்ள வாசலிது வம்மே.

சிந்தையிலே நினைந்து வந்ததெல்லாஞ் செய்யுந்திரு வாசலிது வம்மே
மைந்தரில்லை யென்றவர்க்குச செல்வமகவு தரும் வாசலிது வம்மே
சந்தைகுல முடிமன்னர் மூவரும் காங்கயநன்னாட்டா ரெல்லோரும்
கொங்குமண்டலாதி பரையுமை யொன்றாய்க்கூட்டி வைக்கும்வாசலிது வ [ம்மே

காவலர்க்கும் நாவலர்க்குஞ் செல்வக்காக்ஷி தரும் வாசலிது வம்மே
மூவுலகும் போற்றிசெய் சிவமலை முருகர் மணவாசலிது வம்மே
தேவர்கள் பொன் பூமாரிவாரித் தினம்பொழியும் வாசலிது வம்மே.
சேவற்கொடியாடி நிற்குஞ் சக்தி சிவமலையான் வாசலிது அம்மே.

வாலமோகினி உறத்தியை மலைவளம்கேட்டல்,

விருத்தம்.

வாசிவமலையான் வாசல் வாழ்த்திய குறப்பெண்மாதே
பரிவுடனெய் தினிரைப்பட்டாளி மோகனுங்கி

யுரிய சந்தோஷவார்த்தை யுரைந்தது சரிநீகண்ட
வரைகிரி பர்வதங்கள் மலையெல்லாம் வழுத்துவாயே.

## குறத்தி மோகனாங்கிக்கு மலைவளங்கூறல்.

இராகம். தோடி. தாளம் ஆதி.

கண்ணிகள்.

மேருகிரிவளை பட்டபின் கடைப்பட்ட தெனவிடுத்தோம்
மேலான துருவனுக்குச் சீதனமாய்க் கொடுத்தோம்
வேருடனே கைலாச மெடுபட்ட தெனப்பழித்தோம்
விமலர்க்குக் குடியிருக்க வில்லெனவே அளித்தோம்.

காருலவு மிமயகிரியிற் கங்கைபார்வதிப் பிறப்புங்
கண்டறிந்து கொண்டோமதி லென்றும் பனியிருப்புந்
தாருலவுங் கேதாரப் பொருப்பிற் பிறப்பிறப்புந்
தாரணியிற் பெரியோர்க்குண்டு கைலாசவாசப்பிறப்பும்.

தானறிவேன் கிரவுஞ்சகிரி முனிசாபத்தினாலே
தாருகனுக்கரணாகிப் பொடிப்பட்டது பின்பினிலே
நானறிவேன் மைநாககிரி மிதிப்பட்டமலை யம்மே மை
நாககிரி நீரினிலே பதிப்பட்டமலை யம்மே

வானுலவுங் கோவர்த்தனங் குடைப்பட்டமலை யம்மே
வள்ளிக்காகக் கொடுத்திருந்த வெள்ளிமலை யம்மே
பானிரத முருளையடி பட்டமலை யம்மே
பரிவுள பூச்சக்கிரவாளம் வளைப்பட்டமலை யம்மே.

அஷ்டகிரி வடமலைக்குட் பட்டமலை யம்மே
அருணகிரியனற் கொழுந்தாய் விட்டமலையம்மே
கொட்டிய காவேரிநதியை முடித்தமலையம்மே
குறுமுனிகையிற் பிடிபடுமலை கொடுமுடிமலையம்மே

மட்டுலவும் சதுரகிரி காகமணுகாத
மலையிங்கோ மலையெனவே மதிப்பதாங்களம்மே
திட்டமுயர் திரிசிராமலை தாயின்மாமன் மலையே
திருவேங்கடமெங்கள் கொழுநன் மாமன்மலை யம்மே.

சதுமலை எனக்குச் சொந்த மாமன் குருவின்மலையே
கருவளந் தென்பழனி மலையென் கொழுநன்மலை யம்மே
கோமலை முனி பொதியத் திருந்து குருகினமலை யம்மே
குற்றாலந் காயத்திரி கூடன்மலை யம்மே.

நேமமுனிவர் வராக கிரியானைமலை நீலகிரி
நேரான கொல்லிமலை சேரன்மலையம்மே
சோமகிரி நாமகிரி சங்ககிரி நாககிரி
தோணிமலை காளிமலை வாணிமலையம்மே

பத்தர்பணி விருத்தகிரி பழமலை கிழாமலையே
பவளமலை தவளமலை கவலைமலையம்மே
சித்தர்கிரி கொங்கணர் குகைவைத்த தீபமலையே
திருக்கழுக்குன்ற மெங்கள் தந்தைகுருக்களுக்குற்றமலையே

வைத்தகுடிமிமாமலை விராலிமலை சோலைமலை
மந்தரகிரி எங்கள்சிறு தந்தையார்மலை யம்மே
முத்திதருபரங் குன்றத்திலிந்திரகு மாரிக்கும்
முருகருக்குங் கலியாணமுகூர்த்தஞ் செய்யுமலையே.

கொங்கிற் குன்று தோறாடலிற் காங்கெய நன்னாட்டிற்
குலவும் வட்டமலைகலை தேர் புலவன்மலை யம்மே
எங்குழுயர் பசசமலை புஷ்பகிரி யம்மே
எனக்கு மூத்தமக்கையார்மலை ரத்நமலை யம்மே.

மங்கை திருமணகிரியும் எங்களண்ணன் மலையே
வண்ணமிகுஞ் சென்னிமலை யண்ணன்மலை யம்மே
மங்கள சிவசத்திமலை யெங்கள் சொந்தமலையே
வழிவழி தலைமுறையாக வாழ்வது சிவமலையே.

நாங்களொரு குலத்தினிலே பெண்ணுங்கொடோம் கொள்ளோம்
நம்பிலரைச் சந்தியாம் ஞாயந்தபயில் மதியோம்
தேன்கலந்த தினைமாவுங் கொழுநனுண்ணு முன்னம்
தின்னுமொரு துளிபிள்ளை பச்சிலையுமண்ணோம்.

ஓங்குதினைப்புனங்காப்போ மெங்கள் குறக்குலத்தில்
ஒருகொடிக்காய் மாமாமனுரிமைக்குப் பெண்குடுப்போம்
பாங்குடைய மலைகளெல்லாம முருகர்க்காச்சி கொடுத்தோம்
பரமசிவன்மலையிலெங்கள் பரம்பரைகுடி யம்மே.

### கலிக்கூற்று விருத்தம்.

உவமலை முலை சுமந்தே யொசிந்தொசிந் திடைகளாட
நவமணிமாலை தாங்கி நடஞ்செயுங்குறப் பெண்மாதே
தவமலை வளமனேகம் சாற்றுதல் நனவேயுங்கள்
சிவமலை யதிசயங்கள் செப்பெனச் செப்புவாளே.

### மோகனாங்கிக்குக் குறத்தி சிவமலையதிசயங் கூறுதல்.

தரு. இராகம். கேதாரகௌளம தாளம். ஆதி.

சிவமலையி னதிசியங்கள் சொல்லப்பாலன்
சித்தியுண்டு சத்திமலையே
மவுனமுனிகள ரிஷிகள் ஜனங்கள் சபதவங்கள்
வந்திருந்து செய்யுமலையே.

தேனருவி யருவி கொழிக்கும் மதுவைய[illegible]
வானரங்கள் களிக்குமலையே
கானவர்கள் குடியுந்தழையத் தினை[illegible]
வானம் வந்து படியுமலையே.

சந்தனஞ் சண்பகந் தண்ணிலவுங் கோ[illegible]லவும்
மந்தாரம் நிறைந்த மலையே
பைந்தருச்செங்கதலி மாவின் கனிபழுத்து
சிந்தி விளைந்திடு மலையே.

மாங்கனி பந்தடிக்கு மந்தி பலவின்கனியை
மத்தள மென்றடித்து நடிக்கும் மலையே
தாங்குவண்டு கீதமபடிக்குந் தாண்மலர்
சூரியகாந்தம் வெடிக்குமலையே

சதுரயுகங்கள் கிழமையாய்க் கண்டமலை
சஞ்சீவி கொண்டமலையே
பதுமன் மாலிந்திரன் சித்தாதிகள்
பணிந்து நிற்கும வாசலிது அம்மே.

அதிகமான பசும் பொன்வெள்ளி
அறவைச் செம்புஞ் சலவடிவமான மலையே
மதுரமாங்கனிகள் மலர் கரைந்தலை நாகமும்
வரவழைத்த காட்சிமலையே.

கண்டதுண்டமான வெறுப்பும் பொருந்துஞ் சல்லிய
கரணிகளுண் டெங்கள் மலையே
பண்டைய கிழவருந்தி யிளமையாகப்
பாஷாணமாமுண் டெங்கள் மலையே.

தைத்த தவத்திரத் தின்றலைக்கே தழைந்தெழுந்த
சந்தான கரணிமலையே
பெத்தவாள் தழும்பு தீர்க்குஞ் சல்லியகரணி
பொய்யான தெங்கள் மலையே.

அஞ்சுகங்கள் கொஞ்சுமொழியு மாங்குயிலிசையு
மரிவையர்கள் விளங்குங்கிளியும
மிஞ்சியதேன மொழியும வளமுமணமலர்
மிக்கவுள்ள தெங்கள் மலையே

மாதர்விழி வல்லையை வளைப்பார் கண்டதனை
மாதவருமனது கலைப்பார
தாதுகள் மேலும் விளைப்பார மனக்குறைப்பார
கோதையர் காப்பெங்கள் மலையே.

கரியமதயானை யிலக்கக் கரடி சிங்கங்கள்
வெருவியொரு காதம்விலக
அரிய குழவை வேங்கை வணங்க
அதிசயமாயொரு கொடியுண் டெங்கள்மலையே
தக்கோலமேலம் லவங்கம் சாதிப்பெருங்காயங்
கற்பூரமிஞ்சி மஞ்சள்
விற்போருமவளைந்து விளைந்தகிழங்கு வகை
மெய்யானதெங்கள் மலையே.

கையாத எட்டிக்கனியு மானிடர்கள்
காணாமல் மறைந்தானையும்
மெய்யான ரத்தக்கள்ளியும் பொன்முள்ளியும்
விளைவுண் டெங்கள் மலையே.

கல்லானை மதுர கவிதைபடித் தூரக்கச்
சொல்லானைக் கொம்புண்டம்மே

அல்லான இருளும் பகலையாக்குஞ் சோதிப்
புல்லான புதை யுண்டம்மே.

எருதும் பசுவும் புலியுமே ஓராணைமிசை
ஏற்றுஞ்செடி யெங்கள் மலையே
கருதிய வொண்பது கண்டத்தின் மேலுமே
புல்லுருவிகளுண் டெங்கள் மலையே.
வச்சிர மரகதத்தின கேணி நாராயணி
அச்சுத சிறு வாணிமலையே
எச்சுவய திளமையாக வருந்துங்கரு
நொச்சிகளுண் டெங்கள் மலையே.
வச்சிரகாயஞ் செயய வெண்சாமை வெண்ணுக
மாணிக்க முண் டெங்கள் மலையே
உச்சிதமாகவே மெச்சிச் சித்தர்கள் நிதம்
உண்டாடுந் தேடுமெசிலையே
அந்தமகமேமரை ஈசன் திரிபுரசம்
மாரஞ்செய்யவளைக் குங்காலை
முந்து நொடுபுபுயிலொன்று சிந்தியிலகு
வந்தசிவமலை யிம்மலையே
அஷ்ட தூர்க்கை அஷ்டபத்திர காளியுமோ
ரெட்டுதிக்குங்காவலை மலையே
அஷ்டநாக மஷ்டகுலங்களா குலபருவதமோ
ரெட்டிஞசுற்றுந் தாங்குமலையே.
மருந்து சஞ்சீவி வேண்டியநமந்தர்
சிரஞ்சீவியான மலையே
வய... புக குருநாத வேலரிடும்பர் கன்னி
மாருமய வளஞ்சேருமலையே.
வந்த வலவினை களைக்கும விதரியமுர்த
திருகிமினியுனை டெங்கள மலையே
கந்தவேளருளா ... ககிறைபின் றுமை வெகு
காரண முணடெங்கள மலையே

## இதுவுமது.

இராகம். பூபாளம். அடதாளம்.

கண்ணிகள்.

அருவாரமந் தாரமுங்கன்னி காரமும் விஸ் தாரம்
அன்னமே தெய்வக்கன்னிமார் விளையாடுவாரந்தி நேரம்
பாமாவுயர் சண்பகங்கள் பமரமுந்தேவ தாரம்
பட்சி ஜாதிகள் மெத்தவேயதி னித்தமாகுஞ் சஞ் சாரம்.

பகலானது மிரவானதுந் தெரியாததன் சாகம்
பலகாலமும் நிலையாகவே விலகாததின் மேகம்
மகராசர்கள் குறமாதர்க்காய் வருவார்கள நேகம்
மலர்க்காவிடைக் கலந்தேமன மகிழ்வார்சம் போகம்.

பைந்தருக்களின் மந்தியேறியு தைந்துதான் குதி போடும்
பலவின்கனி யிலைவாழையின் குலைமீதினிற் சாடும்
அந்த மாங்கனி விண்டதேன்வழியாறு போல்வெள்ள மோடும்
அறுகால்வண்டு சுதிகூடியநேக ராகங்கள் பாடும்.

கானவேடுவர் களிப்பார் புனக்காட்டிலே விதைதெளிப்பார்
காலமே களை யெடுப்பார் தினைக்கதிரே கொய்துகுவிப்பார்.
தேனெடுத்தவர் யானைக்கொம்பினிற் றினைமாவினை யிடிப்பார்
தேன் விடுத்ததைப் பிசைந்தே தவசித்தருக்கதைக்கொடுப்பார்.

மஞ்சிபோல் வெண்மை மயிருங் கருங்குஞ்சியாய் வளர்ந்திடவே
மைகள் செய்யவோர் தழையுண்டெங்கள் வளமாகிய மலையே
வெஞ்சினப்புலி பசுக் கூட்டத்தில் மேவியே விளையாடவே
வேர்களுண்டது மேலுமேலுமாய் விளைவாமெங்கள் மலையே

சரிந்த கொங்கை யெழுந்தேவர எழுந்த கொங்கை சரிய
தார்களுஞ் சிலதூர்களும் பல வேர்களுண்டெங்கள் மலையே
வருந்தி மகவில்லார்பெற மலருண்டதை மோந்தால்
மக்களைப்பெறுவார்கள் நிச்சயம் வளருமெங்கள் மலையே.

சத்தபேதியால் நவலோகமுந் தங்கமா யுருகிடவே
சாறுவாங்கிட வொருமூலிகைத் தழையுண்டெங்கள்மலையே
நித்தியமே அயன் முனிவோர் சுரர்நிறைவாமெங்கள் மலையே
நேமசஞ்சீவி ராயர்காவலுண் டாமுடியெங்கள் மலையே.

ஆதியாகிய பார்வதியொரு பாதியாமெங்கள் மலையே
அன்னதானமுஞ் சொன்னதான மநேகமுண்டெங்கள் மலையே

போதுபோனதும் பகலாக வோர் சோதிமாமரமுண்டு
தொல்லுலகினிற் கல்வியும் நலசெல்வமுந் தருமம்மே.

குரங்கானது புலியாகவோர் கொடியுண்டெங்கள் மலையே
குட்டரோகங்கள் மட்டடங்கவோர் கொடியுண்டெங்கள் மலையே
துருமமானது தாணுகவுந் தூணானது திரும்பாய்ச்
சொல்லவே கருநெல்லிமேலொரு வல்லியுண்டெங்கள் மலையே.

மூன்றுலோகமிமைக்குட் சுற்றி முன்போலெதிர்வரவே
முடிமேலணிந்திடவேயொரு மூலியுண்டெங்கள் மலையே
போன்ற வன்னியிற் செல்லவுமந்தி புனல்மேல் நடந்திடவும்
புகழாய்வளர் சந்திசாரணைப்புதையுண்டெங்கள் மலையே.

வெடியுண்டையை நீக்கவுங்குத்து வெட்டேறுமனுண்டாக்கவும்
வெள்ளைக்காவளைமேலுமத்தை மிகவுண்டெங்கள் மலையே
அடையார் வந்து கேட்டசித்திகளியாவுமே தர வள்ளிக்
கொடியுண்டதன் காரணஞ்சொலக் கூடாதடியம்மே.

## வாலமோகினி குறத்தியை நாட்டுவளங் கேட்டல்.

### விருத்தம்.

பாட்டுவள மிசைகாட்டும் பனுவல்வளம் பொருள்காட்டும் பருத்துயர்ந்த, கோட்டுவள முலைகாட்டுங் கரும்பின்வள மொழி காட்டுங்குறமினேமேல், வீட்டுவளங் காட்டுகின்ற சத்தி சிவமலை வேலர் விளங்கிவாழும், நாட்டுவளந் தேசவளம் நகரவளமுந் தலவளமும் நவிலுவாயே.

### தரு. இராகம். தோடி. தாளம் ஆதி.

பூங்கமழ் சிறுகாற்றேரிற் கிள்ளைப் புரவிகொண்டு பரவிவரக்கண்டே
மாங்குயிற் சின்னவெண்மதிச் சத்திரமதன் வந்தானென ஆதும்விசித்திரக்
கோங்கிலவின் முகைமத குங்குமக்கொங்கையின் கலசநலனுங்கவே
ஓங்கிமாதரைத் தேரலங்கரித்துலவுங் காங்கேய நாடெங்கள் நாடே.

மாங்கனிக் கொத்தின் றேங்கின் குலைகளில்
மந்தியேறி யுலுக்கி நடமாட
ஓங்கிய பலவின் கனியாட
வுதிர்ந்து வாழைக்கனிரசமோடத்

தேன்கள் சிந்தி யதினுடன்கூடச்
செந்நெல் கன்னல் வயலெங்குஞ்சாட
வான்படிந்து விளையும் பலவு
வளருங் காங்கய நாடெங்கள் நாடே.

ஓடக்கண்டது மாநதி நீர்கள்
உயரக்கண்டது வீதியெங்குந் தேர்கள்
தேடக்கண்டது தான தன்மங்கள்
செழிக்கக் கண்டது தேவத்தலங்கள்
ஆடக்கண்டது மன்னக்கொடிகள்
அதிரக்கண்டது முரசுதுடிகள்
பாடக்கண்டது கீதங்கள் யாரும்
பகருங்காங்கய நாடெங்கள் நாடே.

முத்திரத்நம் விளைவுள்ள நாடு
முனிவர் வேள்விவளங் கொண்டநாடு
சத்திரசாலை மிகுத்துள்ளநாடு
தடந்தொறுந் தண்ணீர்ப் பந்தலுளநாடு
நித்திய மங்கள கலியாணநாடு
நிறைந்த செல்வஞ் சிறந்துளநாடு
மெத்தவீரம் விஜயம் புகழூ
விளங்குங்காங்கேய நாடெங்கள் நாடே.

நாரணன் சதுமாமறை வேதனு
நண்பர்பாக மிகவுங்கண்டே தொழ
வேறுருப மெடுத்து வரும்போது
விமலர் செஞ்சடை மீதிருந் தேவந்து
மாறுதைத்த பவங்கள் தொலைத்திட
மாதவம்புரிவோ ரனவேதிரு
நீறணிந்து சோறேந்திய தாழைகள்
நிற்குங்காங்கய நாடெங்கள் நாடே.

வில்லைக்காட்டு மதனுக் கம்பாகிய
மேலவர்க்கும் பிறவிக்கிடஞ்செய்து
வல்லக்காசெய் பவங்கடொலைக்கவும்
வகைகள் தான் தெரியாமல் மலர்ந்துமே
அல்லக்காணிதற் கென்செய்கு[illegible]மென
அயர்ந்து நந்தவனங்க ளெங்கெங்குமே
பல்லைக்காட்டியே கெஞ்சுவர் போன்முல்லை
படருங் காங்கய நாடெங்கள் நாடே.

* தங்கக்கட்டியுந் தந்தியின் குட்டியுந்
தாளமோகன மாலையின் பெட்டியு
முன்கைகட்டியே நெஞ்சம் பறைகொட்டி
முடிமன்னர் தினங் கப்பங்கள் கட்டியும்
எங்குமெட்டிய விருதுகள் கொட்டியும்
யானைபன்னிரு கடகங்கள் கட்டியுங்
கொங்கை மெட்டியே யிம்முடி சூடிய
குமர காங்கேய னாடெங்கள் நாடே.

சாமத்துரோக வெதிரியர் மிண்டன்
தக்கசொட்டை முனைவர்க்குக் கண்டன்
தாய்முதுகிற் கவிழ்ந்தோர்களைறிச்
சவுக்கிலே யடிபேர்டப் பொறுத்துமே
நாமிந்தப்புலவோர்க்குத் தொண்டனெனு
நல்லதும்பிச் சருக்கரை யுத்தமக்
காமிண்டமன்றாடி மன்னன் கீர்த்தி
சகிக்குங் காங்கய நாடெங்கள் நாடே.

நிதம் பரப்பிய தான தன்மங்களு
நீதிசற்றும் வழாது வழங்கும்
புதன் பெருகிய புத்தியுங் கல்வியும்
பூசுரர்க்குச் செயுமுபசாரமும்
இதம்பரவு சிவபூசை நேசமும்
* யாவர்க்கு முபகாரங்களே செயுஞ்
சிதம்பரப்பல்லவேந்திரனரசு
செலுத்து காங்கேய நாடெங்கள் நாடே.

† காங்கயத்துடன் வல்லிதன் காடையூர்
கந்தர்மேவிய பட்டாலி கீரனூர்
ஓங்கு பார்ப்பதி நற்பரஞ்சேர்வழி
உற்றகாரை மருதுறை வெண்முத்தூர்

* இந்த அடி பாம்பணகவுண்டன் குறவஞ்சியில் சில எழுத்து மாறுதலாக இருக்கிறது. எழுதுவோரால் சேர்த்தெழுதப்பட்டிருக்கலாம்.

† கொங்கு மண்டலத்தில் " எனத்தொடங்கி வாலமோகினி கூறும் விருத்தத்தில், " கிராமமதோ பன்னிரண்டாம் " எனக்கூறப்பட்டிருக்கினும், இவ்விடத்துப்பதினன்கு ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

தெங்கு கன்னபுரம் வெள்ளை கோவில்
சிறந்தவாறு தொழுவாமல் பாடியு
தீங்கில்லாத கங்காகுல நாட்டார்
செழுக்குங் காங்கேய நாடெங்கள் நாடே.

மறையவர்க்கு பெருஞானியர்க்குங்கவி
வாணருக்குஞ் சிறந்திடு தேவர்க்குங்
குறைவிலாமனைங் கொடுப்போ மெனக்
கூர்ந்து மேழித்துவசங்கள் கட்டிய
நிறைந்த செல்வசம் பத்துள்ள வேளாளர்
நீதிமன்னர்க்கு மாமுடி சூட்டவே
இறைகுடிக ளெண்ணாயிரங்கோத்திர
மிருக்குங் காங்கேய நாடெங்கள் நாடே.

## வாலமோகினி தேசவளம் வினவல்.

விருத்தம்.

வந்தவருக்கூட்டியினி வருபவருக்காக வனம் வடித்துக் காக்கும்
பைந்தரு நேருத்தமக் காமிண்டனுயர் நாட்டில்வரு பாவையே நீ
செந்தமிழின் தேசமன்றி நான்கு திசைகளிலு மன்பாய்சசென்று கண்ட
விந்தைமிகு தேசமெலாம் சிந்தைமகிழ்ந்தினிமையுற விளம்புவாயே.

## குறத்தி தேசவளங்கூறல்.

கண்ணிகள். இராகம். காம்போதி. தாளம்.

சீனமு முச் சீனமும் யாழ்ப்பாண முங்குறியம்மே
செப்பினே மச்சியங் கொச்சி தேசமும்
யானறிவேன் ஈழமலை யாளம் வங்காளம் சோழம்
ஏற்றினேமத்துலுக்கர் மலுக்க டில்லிபல்லவம்.

கேகயமாராடம் கருநாடகங்கனே சிகாசி
கீசகம் சோனகம் லங்கை கோகர்ணங்களும்
வாகுள்ள தெலுங்கலிங்க குலிங்க கொங்கணம்
மகதங்குகுதங் குருவஞ் சாளுவ மாளவதேசம்.

வங்கங்குச்சர பாண்டியம் பப்பர மொட்டியம்
மல்லவஞ் சல்லியங்கணிசொல்லி வெல்லுவோம்
எங்குமுள்ள எண்ணேழுதேசத்திலுங் குறிசொல்லும்
எங்கள்தேசங் கொங்கிற் சிவமலையடி யம்மே

கங்கை யமுனை சரஸ்வதி சிந்துகோ தாவரி—மணி
கன்னிகை பொன்னிய வானி துங்கபத்திரை பம்பையும்

## நதிவளம்.

கண்ணிகள். இராகம். புன்னாகவராளி. தாளம். ஆதி.

மங்கை திரிவேணி பெண்ணை சவுந்தர மாநதி—நல்ல
மாதவர் மூழ்கவே பேதமை நீக்கு முத்தாநதி.

சங்கங்கொழிக்குந் தனுகோடிவைகை மாநதியில்—நித்யந்
தானஞ்செய்தால் வெகு ஞானந்தருந் தாம்பிர வேணி
துங்க பிதுங்கிருஷ்ணை யம்மை நருமதை தோய்ந்தேன்—வினை
தொலைத்தேன் கரைந்த கழுநீர்போலோடித் தேன் பாவம்.

கொங்கினிலாப்பிர வதியெங்கள் மாநதியம்மே—அதிற்
குளித்தாற் பிறவி யொழித்திடலாமடி யம்மே
எங்கள் சிவமலைக்குத்தர பாரிசந்தன்னிற்—செழித்
திருக்கின்ற காஞ்சி நதியின் பெருக்குக் கேளம்மே.

திங்களை யரவந் தீண்டிய நாளிற்படிந்தால்—முன்
சென்மப்பிறவியுங் கர்மமும் நீரோட்டமம்மே
பொங்கிய காங்கேய நாட்டினிற் பார்வதிபுரத்தில்—நாக
புஷ்கரணி தீர்த்த மிக்க மகிமை காணம்மே.

சங்கரர் பால்வண்ணர் பட்டாலிச் சிவமலைக்குடக்கில்—நல்ல
சம்புநதியது உப்பர் நதியடி யம்மே
சங்கத்தார் மூழ்கிய பொற்றாமரைப் பொய்கைக்கிணையாய்—சிவ
சைலத்திலுண்டு சரவணப் பொய்கை மேலம்மே.

## தலவளம்

கண்ணிகள். இராகம். காம்போதி. தாளம்.

கயிலை திருக்காசி கேதாரங் கோகர்ணங் காஞ்சிமதுரைகாளத்தி-சீ
காழி திருவாரூர் தில்லைச்சிதம்பரங்கண்டியூர் பூந்துருத்தி
சயமிகுந்திருக்கோவலூர்பெண்ணைநாவலூர்நான் தரிசித்ததலங்களம்மே, முத்
சாருஞ்சிராப்பள்ளி யானைக்கா அருணை திருப்புடைமருதூரும் [தி
நயமிகுத்த மத்தியார்ச்சுனந் திருக்கச்சியும்நால்வேத வாரண்யமும், கன
நாகரீகமான விருத்தாசலமதில் நல்கு மிராமேச் சுரமும்
சுயம்பு குற்றாலந் திருவாலங்காடுந் துலங்குங்கடம்பத்தலமும்—மிகு
துல்லியமான திருவீங்கோய் மலைதுலங்கு சிவாலயத் தலமும்.

அருள்பெருகிய கொங்கிற் கருவூர் வெஞ்சைகறைஈசை அவிநாசிநண்ணலூ
ரம்பல மேலைச் சிதம்பரமும முருகன் பூண்டி செஙகோடு-மேன்மை
உரியஸ்தலங்களோ வாயிரத்தெட்டெனுற்ற திருப்பதியும நான்
உவந்து தரிசித்தேன் காஙகய நாட்டிலுயர்ந்த ஸ்தலங்களாமம்மே

அரியசிங்கை நகரகத்திசர் மாந்தீசரருள் காடைமாலிங்கமும்—பத்தி
யன்பர்பணியும் பால்வண்ணர் ஆதீசுரர் ஆருத்திரகபாலீசுரரும்
பெரியநட்டீரர் சயஙகொண்டாபட்டீ சர்பித்தர் பொற்சோழேசர்-வெகு
பிரபலமாந்தீசர்விக்கிரமசோழேசர் பேராவயித்தீசர்

தெரிதமிழ்ழாஙகிய அக்கினீசநாதருஞ் சிறந்த பசுபதியும்—நாங்கள்.
தினமுந்தொழு வீசுவநாதர் பதமலரை தெரிசித்திருப்போமம்மே
திரிசந்திய காலமும் நஞ்சுண்டேசுரர்பதஞ் சிந்தித்திருப்போமம்மே—நான்
தெரிசித்த தலங்களிற் சிவமலைமேலான திவ்வியஸ்தலங்களாமம்மே.

## வாலமோகினி குறத்தியின் சாதிமுறைமை கேட்டல்

கலிப்பா.

சோதி சத்தி சிவமலையிற் சுப்பிரமணியர் தன்னருளாற்
சாதிமொய்த்த முல்லைமலர் சண்பகமும் பாதிரியும்
கோதிவைத்த குழலணங்கே குறமாதே உஙகளிட
சாதிவித்தை குலவொழுக்கச் சங்கதியுஞ் சொல்வாயே,

## குறத்தி வாலமோகினிக்குச் சாதிமுறைகூறல்.

கண்ணிகள். இராகம். சங்கராபரணம். தாளம்.

எங்கள் ஜாதிவித்தைத்திறங் கேளடியம்மே—யம்மே
எஙகள்குல தெய்வமுருக வேளடி யம்மே
துங்கமதயானையைப் பிடிக்குளடங்க நாங்கள்
செல்வ மொருகுளிகை கொண்டு புல்கவுமம்மே

கொக்கினை மொக்கியபின் குதிரையாக்குவோம் பக்கியிற்
கோழியையும் மயிலாககியபின கொடிகளாக்குவோம்.
குக்குடத்தை வாரணம தாக்கிப்போடுவோம—மிளங்
குமரனையும பசுஙசபிள்ளைக் குழவியாக்குவோம்.

வானத்தைப் பிடித்துத்துளைத் தாதிப்புடிப்போம்—மணலை
வழித்தெடுத்துக் குழித்கயிலமாகவடிப்போம்
பூநெருப்பினை யாகசித்தேனுய்க் குடத்திலடைப்போம்—தேவர்
பூசுரார்க்குந் தினைமாவிற் கலந்து படைப்போம்.

அம்மியை ஆகாசத்தினிற் பறக்க விடுவோம்—உயிரி
லாதவரைப்பகலிரவும் நடத்திய வைப்போம்
தம்பியலாற் கம்பியர்செய் பம்பரங்களை—நாங்கள்
சாட்டையில்லா தாட்டிவைத்துத் தாட்டிகங்கொள்வோம்.

புல்லும் புலியாகவொரு சொல்லையறிவோம்—நல்ல
பொறபுளகுன்றினைக் கையால் வாரியெறிவோம்
வல்லமைசேர் வேங்கையினை மரமதாக்குவோம—மரத்தை
வைத்துலையிலே யுருக்கி யிரும்பதாக்குவோம்.

எட்டுவரையுஞ் சட்டியில் வறுத்துக் கொறிப்போம்—அம்மே
வழுகடலையுமொன்றாய்க் கலந்து பிரிப்போம்
அட்டமேவழுதனையும் பிடித்துச் சுவைத்து விடுவோம்—நாங்கள்
யாவரையு முள்ளங்கைக்குளறியக் காட்டுவோம்.

மனிதரை யங்கிக்குட்புகுத்து மறுகாதழைப்போம்—இன்னம்
மந்திர வித்தை மெத்த நாங்களறிவோங்காணம்மே
இனியகுற வள்ளி பதத்தைத் துதித்துப்படிப்போம்—நாங்கள்
என்றுஞ்சிவ மலையிற் குடிலை கட்டியிருப்போம்.

இதுவுமது.

கண்ணிகள். ஆநந்தபைரவி. அட்தாள-சாபு.

எங்கள் குறச்சாரியின்குல வொழுக்கச சங்கதிகளையே—நாங்கள்
எப்போதும் வள்ளியம்மன்பொற் பதத்தைத துதிக்குஞ்சாரியம்மே
அக்குமணித்தாவடமுஞ் சங்குமணியுங் கொங்கையிற்றரிப்போம்—தரித்
தந்திபகற்கு ஞவணிட செம்பதத்தைக் கெஞ்சியுபசரிப்போம்.
கொக்கிறகுங்குன்றிமணிக்குச்சுங்குழற் கெசகுவிருதணிவோம்-அணிந்து
[illegible]னவென் கள்ளுக்குடித்து வந்து வெறியினியிற் கோபித்தாலுந்தணிவோம்
[illegible] சிறு புள்ப்பல்லைச் சிறுதாலியாகக்கழுத்திற் கட்டிக்கொள்வோம்
நாதியின் இமயுரியிறரேன் வந்தியுங்கடகஞ் செய்ய விள்ளுவோம்.

கைவிரற் கணிக்கியிலே கணையாழி மோதிரங் களிடுவோம்-இட்டுக் கச்சுமுலைக்கணியாமுன் மாசிலா வத்தாதுந் தள்ளி விடுவோம் ஆக்குந்தினைச் சோறுங்குறவை நண்டாங்கொள்ளாமுன்னா ... ஆமைக்கறி பூனைக்கறி யானைக்குஞ் சோறாக்கிடக் கணைப்போம்.

சாராயங்களென்முன் மெத்தப்பூராயமாய் மனம் விரும்பிக்கொள்வோம்-கொண்டாற், சரசஞ்செய்ய உபசாரமாய்க் குறவன்வந் தாலனுசரித்துக் கொள்வோம், எட்டமைந்த கணிகைநற்பொருஞ் சுட்டிப்பரி சமுந்தருகச் சொல்வோம்-சொல்லி, சட்டுக்கொண்டு மணவாளன் வீட்டுக்குற முறையெல்லாஞ் செய்வோம்.

ஏழுநாள் முகூர்த்தம் நிறைநாழிவைத்து மணப்பறையடிப்போம்-அடித், தெங்கள் குறவர்களித் தாய்க்கோர் பொங்கலுமிட்டோ ருசந்திபிடிப்போம், கங்கணமணிந்து மணப் பொங்கலிட்டுக் கலியாண முடிப்போம்-முடித்துக், கைகொடுத்த குறவனைத் தெய்வமெனவொருநிலைமை பிடிப்போம்

சிங்கன் வேறோர்குடியிற் றங்கியிருந்தாலுங்கையிற் றீண்டோம் வழியிற், றெய்வ மெதிர்பட்டாலு மிது கைப்பலல்லவென்றென்னைக் கண்டு வேண்டாம், ஆமக்களலாயலொரு சாமக்கள் வரையுமுகம் பாரோம்-பார்க்க, ஆடாத கூத்தாடினாலும் அப்பாற் கெங்கனை விட்டுப் பேசோம்.

தமக்கை கணவனெதிரில் வந்தால் நமஸ்காரஞ்செய் தோரிடத் தில் மறைவோம்-மறைந்து, தாய்மாமனைக் கண்டபோதே தலை குனிந்துபேச நாணிக்கொள்வோம், எங்கெங்குஞ் சிரித்தாலுந் தங்கித்தரித்தங்கோரிர விருக்கோம்-இருப்ப, தெந்நாளுஞ் சிவ மலைக் கந்தர் பருவதத்தினி லம்மே.

## குறத்தி குறிசொல்லிப் பெற்றவரிசையை வாலமோகினி கேட்டல்.

### விருத்தம்.

மவுனமுனிசனர் திருவும் வாசவனு மனுதினமும் மனங்குளிர்ந்து
தவசுபுரி சிவமலையின் வேலர் மருவிய வள்ளித்தாயைப் போற்றி
நவரசச்செந்தேன் வசனம் பயிலுகின்ற குறமாதே நலமதாக
அவரவர்க்குக்குறிகள் சொல்லி வரிசைபெற்ற வகைவிபர மறைகுவாயே.

## குறத்தி பெற்ற வரிசையைக்கூறல்.

தரு. இராகம். நாதநாமக்கிரியை. ஏகதாளம்.

பல்லவி.

எக்குறிகளுஞ்சொல்வோ மம்மே. அம்மே அம்மே—நாங்கள்

அநுபல்லவி.

கைக்குறி கணிக்குறிகள் கண்டு சொல்வோமம்மே (எக்குறி)

சரணங்கள்.

சசிக்குக் கனிக்குறி பார்த்தேன்—தேவ
குருநாதன் மருவலை சாக்ஷிகள் கொடுத்தேன்
பசுத்த தங்கக் கடயங் கொடுத்தாள்—குழம்புப்
பத்தரைப் மாற்றுத் தங்கக் குப்பிமுடிக்காள். (எக்குறி)

சந்திரமதிகையைக் கண்டேன்—அரிச்
சந்திரன் சேர வாரென்று தான்குறி விண்டேன்
இந்தசவர்ணைப் பட்டுடுத்தாள்—கோடி
யில் கொட்டியாணமு மீந்தென்னையடுத்தாள் (எக்குறி)

சீதைக்கு ரகுராமர் சேரக்—குறி
செப்பின தெரிப்பிற் செவிக்கிட்டாள் கொப்பு
காதுக்குத் தோடொரு சோடி—நல்ல
கைக்கட்டுப் பலவாமுறுநச் சுட்டியு மீந்தாள். (எக்குறி)

தமயந்திக்குக் குறி சொல்லி—நள
சாபின்னராசன் சார்ந்தனளைப் புல்லி
சம்போகந் தருவாரென் றுரைத்தேன்—அவள்
தந்தபதக்க முயர்ந்த தாமம்மே. (எக்குறி)

தேசமெங்குங்குறிபு கன்று—வெகுமானஞ்
சிவமலை முருகேசர் கிருபையால் வென்று
ராசாராசர் மெச்சித்தந்த வரிசை
நவரத்நபணிகளநேகங்கங்களம்மே (எக்குறி)

கவிக்கூற்று.

விருத்தம்.

புலவர்கள் புகழு வாழ்வு பொங்கு காங்கய நன்னாட்டில்
வலிமைசேர் சிவாசலத்தில் வாழுநற் கொடியேயிந்த

உலகெலாங்குறி புகன்றே வியா வெகுமானம்பெற்று
யிலவின் பெல்லிதழின் வாயா லெனக்கொருகுறி சொல்வாயே.

## குறத்தி குறிசொல்லுதல்.

கண்ணிகள். இ.ம் புன்னாகவராளி. ஆதிதாளம்.

சொல்வேறு னென்ன குறி யாகிலுமம்மே—ராச
துரைகள் சபையிலினும் வெல்லுவேனம்மே
செல்லுவஞ் சிவமலைக் குறத்தி நானம்மே—பசி
தீரவே யெனக்கித்தனை கஞ்சிவாரம்மே.

நல்ல கூழிருந்தாற் சற்றே கொண்டுவாவம்மே—அம்மே
நானுங்குடிக்கை நிறைய மண்டுவேனம்மே
அல்லப்பாக் குமிலையு மருந்தத்தா வம்மே-சற்றே
அருகு கிள்ளி கப்பற்சாக் கருவுதாவம்மே.

அம்மே யம்மே மேற்கவுளி யாகுரே யம்மே—உனக்
காக்கமும் பெருக்கமுந்தான் வருகுரே-யம்மே
தும்மலொன்று மாறுகவே தோணுரே யம்மே—ஆதி
சூக்குமாங்கை வீச்சிட் டரு வாச்சுரே யம்மே.

வாரணங் குரலிட்டரு மேலான ரம்மே—காகம்
வந்திடங் கூவனரு நலங்காணு ரம்மே
பூரணத்திலே சரம் நடக்குரே யம்மே—பசும்
பொன்னென்னனி மித்தமிது சென்னேனு னம்மே.

உத்தம சகுனமெல்லாம் ஒங்குரே யம்மே—உன்
உள்ளத்தில் நினைத்த தெல்லாம் ஒக்குமே யம்மே
சத்தி சிவமலைவேலர் தயவு வருமம்மே—வள்ளித்
தாய் கிருபை யுனக்குண்டு பொறு பொறுவம்மே.

## இதுவுமது.

### விருத்தம்.

கலகல வென்றே பல்லிகழறுது சிவாசலத்தில்
உலவுமன் குங்குமம்போ லொளிதிகழ் மெய்யான் வீரைத்
தலமதில் வாழ்வாறுறு தலையுளான் கண்ணீராறுன்
கலைவனுனக்குத்தக்க நாயகன் வருவா னம்மே.

கண்ணிகள். இராகம். சாவேரி அடதாளம்.

சந்தனஞ் சவ்வாது பன்னீர் குங்குமங்கள் கலந்து
தரைமெழுகிக் கோலமிட்டுக் கணபதிவை யம்மே
கந்தமல ரறுகு புனைந்தக்கதைவை யம்மே
கடலைபொரி தக்கணையும் பாக்கிலைவை யம்மே

முந்தவுமே தேங்காயு மெட்பொரிவை யம்மே
முப்பழமும் அப்பம்வடை சர்க்கரைவை யம்மே
விந்தை நிறை நாழியளந்துவையா யம்மே
மேலான தூபமும்நெய் விளக்குவை யம்மே.

கும்பிடுவாயைங்கரனைக் குட்டிக்கொள்வா யம்மே
குலதெய்வத்தை நினைந்தங்கனே குந்திக்கொள்வா யம்மே
நம்பிக்குறி யின்னதென்று நினைத்துக்கொள் வாயம்மே
நான் சொல்வது சிவமலையான் கிருபையினா லம்மே.

## வாலமோகினியைக் கைகாட்டச் சொல்லுதல்.

விருத்தம்.

அஞ்சிலேலொன்றுகூட் டியமுகத்தா றாறிலே யிரண்டு சேர்த்திய புயத்தான், மஞ்சிலே தினம் போர்த்தசிவாத்திரி வாசர் வாலமோகினியேயுன் வந்தவேளை, உஞ்சிலேட்டஞ்சுதின மிகவு நன்றே ஒண்டொடி நீவந்திருந்த தலமு நன்றே, நெஞ்சிலே நினைத்தகுறி காட்டுதற்கு நீட்டுவா யுனதிடக்கை காட்டுவாயே.

கண்ணிகள். இராகம் சுரசரப்ரியை. அடதாளம்.

சொக்க நெளியிட்ட திருக்கையைக் காட்டா யம்மே
கஞ்சமலர்க் காந்தமெனுங் கையைக்காட்டாய்
தக்க கணையாழியிட்டகையைக் காட்டாய்—பசுந்
தங்கக் கங்கண மிட்டகையைக் காட்டாய்.

சொக்க நெளயிட்ட திருக்கையைக் காட்டா யம்மே
துலங்கு சங்குரேகை யுற்றகையைக் காட்டாய்
மிக்க சிவமலைவீர மாநகர்க்குள்ளே—நல்ல
மெல்லியருக்கரசே உந்தன் கையைக் காட்டாய்.

## கைவரைபார்க்கச் சொல்லுதல்.

கலிப்பா.

பஞ்சிலு மெல்லடியிடையாள் பாவை வள்ளிபாசையினால்
செகநசுப வடிவேலர் சிவகிரியின் மிசைவாழ்வுகந்து
கொஞ்சுபசுங் கிளியினமொழிக் குறமாதே கூழமுது
கஞ்சியுண்டவாயாலே கைக்குறிகள் சொல்வாயே.

## குறத்தி வாலமோகினியைப் பார்த்தல்.

கண்ணிகள் பைரவி. ரூபகதாளம். இராகம்.

நித்திய மனதான வளம் நிலைக்கு மிந்தக்கையே
நீணிலத் தெண்ணூன் கூறும் நிறைக்கு மிந்தக்கையே
புத்தமுகம் போலுமழை பொழியு மிந்தக்கையே,
புலவருக்குக் கவிதொலைய இலகுமிந்தக் கையே.

ஒத்தமனை யறப்புரிய வுற்றவிந்தக் கையே
உத்தமர்கள் நினைத்தபொரு ளுதவுமிந்தக் கையே
சந்திரபதியென வுலகை யாள்வதிந்தக் கையே
சத்தி சிவமலைபாலருட் டழைக்குமிந்தக் கையே.

## குறத்தி கைவரைபார்த்தல்.

வேறு. சிந்து இராகம். சகாணு. ஆதிதாளம்.

மிக்க துவரை ரேகையிருக்கிற வம்மே
மேனமைக ளுண்டடி யம்மே
தக்க சமிபதி ரேகை யிருகண்டா யம்மே
சநதான ரேகை யீரம்மே

இக்கு மொழியாமச்சிய ரேகை யிருக்கக்கண்டாய்
எவ்வுலகும் புரப்பா யம்மே
சக்கர ரேகையிரு யிருக்கக் கண்டாய்
சத்துரு பயங்களிலை யம்மே.

டமருக ரேகையரு விருக்கக் கண்டாயம்மே
சாம்பிராச்சிய போகமிரு வம்மே
அமுதமொழியாய் யங்குச ரேகையிருக்கண்டாய்
அஷ்ட லட்சுமியும் நீங்காரம்மே.

சமுசியமோ பதும ரேகை யிருக்கண்டாய்
தானிய சம்பத்துண்டடி யம்மே

விமலர் சிவமலையில் வேலர் கிருபையாலே
மென்பேலும் வாழ்வாய்நீ யம்மே.

கவிக்கூற்று.

---

விருத்தம்.

வகைக்குறி பார்க்கவிக்க மாதினைக் கைபிடிப்பார்
நகைத்து முப்புரமெரித்த நாதர்க்கு மேமேலோனெனவுறுசல்
மிகைக்கிடமாகு தென்ன வேசிவன்மலைக்குறத்தி
திகைத்து மெய்க்குறிகள் சொல்லத் தெய்வதத்தை வணங்குவாளே.

குறத்தி குறிசொல்லத் தெய்வம் பராவுதல்

அகவல்.

கல்வியின் கடலாய் வல்லமை யிடமாம்
நல்ல விநாயகா நாரணன் மருகா
செந்திலவாழ் முருகா சிவமலை தனி யுறை
கந்தனே யுனது கழலிணை சரணஞ்
தெய்வகுஞ்சரியே தேவர்கள் தனியே
வையகம புகழ்குற வள்ளி நாயகியே
கலியுக வரதா கைலாச நாதா
சிலையருள் குமாரி சிவலோக நாயகி
பால்வண்ண நாதா பகர் சதுர் வேதா
மாலினி நல்ல மங்கை நாயகியே
நஞ்சுண்டலிங்கா நதியணி துங்கா
மஞ்சுண்ட குழலி வலலி பார்வதியே
ஆலியூர்கௌரி யாகிய கரிய
காளி நாயகியே கண்முனேவருவாய்
பார் முழுதாளி பகர் வீரகாளி
சூரி சாமுண்டி துர்க்கை பிடாரி
சயில மீதுறையுஞ் சத்த கன்னியரே
அயில் வேலனையரு ளாயி யாத்தாளே
பட்டாலியூர் வாழ் பாதிரிவிநாயகா

கட்டாணியான கர்ப்பூர விநாயகா
அஞ்சனாதேவி யருளிய சேயே
சஞ்சீவிராயா தயவு செய்வாயா
இடும்பா கடம்பா இனிய மாமுனியே
கடநதிகழ் பூர்வ சமுத்திரகணிகளே
சூலகபால துஷ்ட சாமுண்டி
கால வயிரவா கருப்பண்ண ராயா
எக்காலதேவி மைக்குழல் மாரி
சக்கரதேவி தாண்டவாடம்பரி
மலை காவலையா வனதேவதைகளே
வலையா யோடி வரும்பன்றி மாடா
இருநிலமதிலே யியம்பிய புதுமை
கருதியே காட்டுங் காளி விநாயகா
மைக்குழல் வள்ளி பலையாள பகவதி
திக்கெலாம் புகழுஞ் செய நாச்சிமுத்தயா
பொருந்திய மாநகை புரி நாட்டு ராயா
விரும்பியோர் குறிக்காய் வேண்டினேனுன்னை
முன்வந் திருந்த மோகினியாள் மன
துன்னியகாரிய முயிரோ பயிரோ
தாதுவோ தவச தானிய வகையோ
மாதிவள் நினைத்தது வைப்பொடு செப்போ
கலவையோ களப கஸ்தூரிவகையோ
சலவையோ பட்டோ தங்கமோ வெள்ளியோ
வட்டியோ செம்போ மாடோ மனையோ
கட்டிலோ மெத்தையோ கனதிஷ்டிதானோ
சூனியர் செய்த சூட்சுமத்தின் பிசகோ
ஆனதோர் குலதெய் வங்கள் செய்பிசகோ
மருந்திட்டுச் செய்த வல்வினை மயக்கோ
பொருந்தாதோர் செயும் போட்டியில் வந்ததோ
மாதுதா னொருவன்மேல் மனது வைத்ததுவோ
தாதுதா னொருவர் சொல்லிவிட்டதுவோ
செங்கையில் வளைகள் சிந்திய தியக்கோ
மங்கைதான் மகிழ்ந்து மணம்பெறு குறியோ
இயம்பிய குறியி லெக்குறியாயினும்
நயம்பெற வகுத்து நவின்றிடுவீரே:—

# சிவமலைக் குறவஞ்சி.

## வாலமோகினிக்குக் குறத்தி, குறிசொல்லுதல்.

வடித்த செந்தமிழ்ச் சிவாத்திரி வாசர் மேலாசை நேசம்
பிடித்தது நிசமேயாரும் பிசகல்லவென்று வாய்மே
லடிக்குது சக்காதேவி யதனிலென்னுடைய நாவுந்
துடிக்குது குறிகளினிச் சொல்லுறேன் சொல்லுறேனே.

கண்ணிகள். இ. ம். பூரிகலியாணி-ஆதிதாளம்.

### குறத்தி சொல்லல்.

நல்லரு நல்லரு குறிசொல்லக் கேளா யம்மே—எல்லா
நங்கையர்க்கெல்லா மரசே சொல்லக் கேளாய்
செல்வச் சிவமலை வாலமோக ஞங்கியே உந்தன்
சிந்தையில் நினைத்தகுறி சொல்லக்கேளாய்

கொல்லத்தின் வெல்லமே குறிசொல்லக் கேளாய்—விக்கலுங்
கொட்டாவியு மாகுறே யயிற் கூச்சிடுகிறே
மெல்ல மெல்லக்கண் சிவக்குறே உடல் நடுக்கிறே-மயிலும்
வேலுமாகத் தோணுறே மணம் விடுகிறுதே.

சுந்தர மடந்தை யருடன் றெருவிலே கூடித்
தொந்தோ மென்று பந்தடிக்கும் வேளையினிலே
தந்தி முதுகிருந்தோர் மன்னிந்திரன் போல் வந்தான்
றுனைக்கண்டு மருண்ட ருய்த்தோணுறே யம்மே.

### வாலமோகினி குறத்தி சொன்னதைத் தடுத்து வினவுதல்.

விந்தை விந்தைக் குறவஞ்சி நாடகக்காரி—நல்ல
வேடிக்கைவித்தை யெங்கே தேடிப்படித்தாய்.
மூந்து குறியொன்று தவிராமல் நன்ருய் பின்னை
மொழிபிறழுாய் மாமாலத் தொழிலறிகுவேன்

பந்தி பந்தியாய் வருஞ் சேனையைக்கண்டால்—மெத்தப்
பாவையர்க்கென கிறுகிறுப்பு மயலு முண்டோ
இந்த மயக்கமுந் தியக்குங் குளிருங் காச்சலும்—வந்த
எந்தவகை யெந்தவகை யறந்து புகல்வாய்

சிந்தையென் யோக புருடர் தேரின் மீதிலே—வருஞ்
சிங்காரப் பவனி கண்ட தெரிவையர்க்குள்ளே.
சொந்தமென நீயவன்மேல் மோகித்தா யம்மே—யாரு
சொல்லப்பயந்தே விக்கினேன் சொல்லேனடிமே.

'இன்னல்மொழி மின்னரசே உனக்குவந்த வெப்புங்
காச்சலல்ல காமக்காச்சல் கண்டுபாரம்மே.
மின்னனையாய் கிறுகிறுப்பும் அன்ன வெறுப்பும்—அரு
விரகக் கிறுகிறுப்பே வித்தாரக்கள்ளி.

### வாலமோகினி கோபித்துப் பேசுதல்.

நன்னகரில் கன்னியென நானிருக்கவே—பின்னோர்
நாமம் வைத்தாய் காமியெனவும் நாடறியவே
உன்னினைவிற் சொன்னகுறி யொப்பிப்பாயானால்—அவ
னூருஞ் சொல்லிப் பேருஞ் சொல்லித் தாருஞ்சொல்லடி

### குறத்தி சொல்லல்.

ஊரும் பேருந் தாருஞ் சொல்லவே யெனக்கவன்—சற்
றுனக்குப்போலப் பழக்கமோ அறிமுகமுண்டோ
தேருந் தெருவுங் கோபுரமுஞ் சூழும் பட்டாலி-நகர்ச்
சிவமலைக் காங்கேய னெனவும் நாணிக்குனிந்தாள்.

வேரிகடம்பமாலை நாளையேவரும்—இனியுன்
வெட்கமெல்லாங் கக்கத்தி லிடுக்கிக் கொள்ளம்மே
பேர் பெறுவாய் சிவமலை வேலரணைந்தே—மெத்தப்
பிரபலமாய் வாழ்வாய் வால மோகினிப்பெண் மானே.

### கவிக்கூற்று

### விருத்தம்.

என்னவேகுறி புகன்ற வியல்பினால் மோகனுங்கி
மன்னவன் சிவாசலத்தில் வாழ் குறவஞ்சிக் கேற்ற
பொன்னிறுபரணம் பூட்டப் பூண்டவள் புகழ்ந்து நாடு
நன்னகர் தோறும் சென்று நவின்றிட நடந்திட்டாளே.

### இதுவுமது.

### விருத்தம்.

அக்குமணி கொக்கிறகுஞ் சூடிக்கொண்டே யலங்காரச்சிங் கிளரும் வழியைத்தேடி, மிக்கபுலி காடி சிங்கம நடுநடுங்கி வெருவியிடக் குருவிகொக்குங் கதரியோடக், கக்க ககவெனும் பட்சிபிடிக்க வேண்டிக் கண்ணிவலை முதலான தெடுத்துக்காண்டு, தொக்கெனவே திடுதிடென நடைநடந்து சுயம்பு சிவமலைக்குறவன் றோன்றினனே.

* சிங்கன் வருகிற கண்ணிகள். இ-ம். நாதநாமக்கிரியை, அடதாளம்.

பரிந்துகொண்டே கொக்கிறகு தலைமீதிற் சூடி
படபடெனக் கண்ணிகொண்டு பட்சிவேட்டைகளாடி
அறிந்தெனவே பட்சிவேட்டைகளாடி நடமாடி
பவன் கயிலே யீட்டிகொண்டு எலிப்புலியைத்தேடி

விருதுகட்டி மீசைமுருக்கி வேங்கையுயிர் நாடி
வில்லம்புங் கையிலெடுத்து வீறுப்பயில் பாடி
தெரிதமிழ்சேர் சிவமலையான் புகழினைக் கொண்டாடி
திக்கெனப் பட்டாலிக்குளுவச் சிங்கனும் வந்தனனே.

இதுவுமது கவிக்கூற்று. விருத்தம்.

கோழியைப் பிடித்தநாதன் குலவிய சிவாசலத்தில
கூளியாய்ப் பூனைபோலக் குருகியங்கொளிந்தெழுந்து
ஞாளிபோலடிகள் தூக்கி நரியெனப் பதுங்கி மெள்ளப்
பேழைவாய்க்குளுவ னென்னும் பெரியசிங்கனும் வந்தானே

சிங்கன் தன் வலிமை கூறுதல்.

இராகம். முகாரி ஆதிதாளம்.

மூவரிற் பெரியார் தேவர்கட் குரியார்
முத்தியங்குரியார் சத்தியங்கிரியார்
கோவிலைச் சூழலார் கால் நரம்பெடுத்தே
குருவிகள் பிடிக்குங் குறவனும் நானே.

ஆதியிற் பெரியார் ஆறெழுத்துடையார்
ஆரணப்பொருளா மருட் சிவமலையில்
சோதியைத்துதிதியார் தோலினையுரித்தே
துடிமிகளடிக்குங் குறவனும் நானே.

தலைதனையுடையார் நிலையினிற் பெரியார்
கதிசிவமலையார் பதமதைத் துதித்தால்
பலனெனப்பணியார் முடிமயிரறுத்தே
பறவைகள் பிடிக்குங் குறவனும் நானே.

சம்பு குமாரர் அம்பிகை பாலர்
சரவணபவனு ரரிதிருமகனார்

---

* சிங்கன் என்பது குறசாதியிற் பிறந்தவனுக்குப் பெயர், குளுவ னென்பதுவு மதுவே.

செம்பொனென் றோதுஞ் சிவமலை யானைத்
தினம்பணி பெரிய சிங்கனும் நானே.

* நூவன் வருதல்.

விருத்தம்.

அரவின்மேல் நடனமாடு மரிதிருமருக னென்று
திரதாய்க் குலவுஞ் சத்தி சிவமலை முருகர் முன்னே
காமகி லீட்டிகொண்டு கவிகதை யநேகங்கூறி
இருளெனக் கருத்தமேனி எலிப்புலி நூவன் வந்தான்.

கண்ணிகள் இ. ம். சாவேரி. ஆதிதாளம்.

காடைச் குருவிக்குச் கண்ணிகொண்டு
கதுவாரி பிடிக்கக் கட்டெடுத்துக் கொண்டு
ஓடத்தடங்கள் பல பண்ணிக்கொண்டு
ஓட்டகம்போல நூவனும் வந்தானே.

பெருச்சாளிப் பொரிபினை யெடுத்துக் கொண்டு, பெரிய முயலுபிட்பு பிடித்துக்கொண்டு, நரிக்கானவலைகளுஞ் சுமந்து கொண்டு, நட்டணச்சவங்க நூவன் வந்தானே.

கட்ட மிருகங்களை யதட்டிக்கொண்டு, சூறைவயிற்றினைதிமிர்த்துக்கொண்டு, கிட்டர்பணி சிவமலைவேலர் பதத்தைத்-தேடிப் பணி நூவனும் வந்தானே.

குலவைபிட்டலறியே கூவிக்கொண்டு, குக்சலை முயல்மீதிலேனிக்கொண்டு, சிலைகட்டிய சிங்கனை மேவிக்கொண்டு, சிவமலை நூவனும் வந்தானே.

கவிக்கூற்று.

சிங்கன் பக்ஷிகளைப் பார்த்தல்.

காமதேர்ரிராமூருங் காங்கய நாட்டிலோங்கும்.
வாதர் பட்டாலி யூரில் மருவிய சிவாசலத்தில்
பெருகியநூவன் சிங்கன் பின் தொடர்ந்தோடிக்கூவ
வருகின்ற பக்கிபார்க்க மாமாமேறினனே.

---

* நூவன்-குறவர்க்குள் தோழமை யுடையவன்.

## சிங்கன் பக்ஷிகளின் வரவு கூறுதல்.

இ. ம். கலியாணி. ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறதையே—பறவைகள்
வருகிறதையே.

அநுபல்லவி.

வருகிறதையே சிவமலை தனினுறை, வாலவேலவருச்சிக்கா லக்கட்டளைகிட்டப், பருகிய பட்டாலிக் குளத்தினுள்வாயினும், புறவாயினும் மேய்ந்து குடுகுந் தாராக்களும், பெருவாரியாகவே கம்புளும் போத்தும், புறாக்கூட்டமுந் திருத்தேர்க் கூட்டம் போலவும், அரிதான சண்பகக் காவளஞ்சோ தாஞ்சி, ஆறு நிறைந்து பெருகின வெள்ளம்போல்

(வருகிறதையே.)

சிந்தையில் வைத்துச் சிவமலை வேலரைத், தினமும் நினைத்துத் தரிசனஞ் செய்துகொள், டந்தி பகலுங்கருணைக் கடலி, லமுதமருந்திய அன்பன் காங்கேய நகர், வந்த புரந்தர செங்கண்ணகோத்திர, வசந்தன் சிவமலை மாலமராபதிச் சுந்தர காங்கேயன் செங்குளத்துள் வாயிற், சுற்றிச்சுற்றியே மேய்ந்து வக்காக்கூட்டமிருந்து

(வருகிறதையே.)

சுந்தன் சிவமலைக் காங்கேயருக்குக், கனத்த வனசக்கிரத்துப்படித்தரப், பந்திச்செலவுக்கு மண்டபந்தன்னிற், பதித்த தளவிசைக்கற்பணி வேலைக்கும், முந்திப்பணையங் கொடுக்குஞ் சிந்தை நகர், முதன்மையிற் றார கோத்திரனைகமலை, பிந்துநகுமாரனச்சிமுத்து வயலோரம் பேராயமாய்ப் பக்கியோராளமாகவே,

(வருகிறதையே.)

மரங்கொத்தி பச்சியும் நாகணவாய்ச்சியும், வலியானுஞ் சிட்டுடன் மாடப்புறாக்களும், பொருந்திய வள்ளி நகர்க்குளத் தேரிப், புறவாய்ப் பழனத் திருத்தில் வில்லிகுலத், தாரந்தர நாட்டார் மகிபன் பண்ணைப்பற்றுச் சொல்லு மாந்தைகுலச் சிவமலைவயலினும், திருந்தும் புல்லகுல நல்லணன் கருமணன், செங்கரும்பின் தோட்டச் செய்யினிலே மேய்ந்து.

(வருகிறதையே.)

வாகன் திருமால் மருகன் சிவனுக்கு வள்ளிபங்கன் குகன் மண்டபக் கட்டளைக்கு, நியாகமும் வாகன நாகமுந்தந்து, தரிசிணஞ் செய்யும் பொருளங்கைக் கோத்திர, காகர்களைப்பிரசமகிமனு, நல்பச்சைசாயலுடன், காங்கேயோர்களும், யோகமிகுந்திடும் காடை நகர்குளத் துள்வாயில் மீன்கொத்தி புல்வாயிலே கொண்டு.

(வருகிறதையே)

பட்டாலிச் சத்திரி வாத்திரி முருகர், படித்தரத்துக்கும் நெற் பச்சையரிசியும், கட்டளைவாக வளர்ந்துகொடுக்கும், காதலன் வெட்டுவச சின்னையன பாட்டத்தும், தட்டாமல் நித்திய மனசந்திரந்தாக் கருந், சமாராதனைக்குந சகலமுமேதரும, நெட்டான கன்னைகுலச் சின்னையன செய்யில், தென்மொக்கிக் குக்கிவிக்கிக் கக்கிட பக்ஷிகள்.

(வருகிறதையே)

சிங்கன் சொல்லுதல்.

கட்டளைக் கலித்துறை.

பேராளர் சத்தி சிவாசல வேலவ பேரினிலே
போராளமாய்க்கவி போதும் புலவருக் கெப்பொழுதுங்
காராளர் காங்கேய நாட்டாக ளீயுங் கனதனம்போற்
றூராளமாய்பபல பக்ஷிகள் தானிரை சாயுதையே.

சிந்து இ. ம் கலியாணி. ஆதிதாளம்.

பல்லவி.

சாயினுமையே பறவைகள்—சாயினுமையே.

அநுபல்லவி.

ஆயன் மருகன் விசாகன் கார்த்திகேயன், அன்னதான சுப் பராயனமபிகை யருள், சேயன் சிவமலை வேலர் திருப்பணிக்குந், தேர்க்கும் பருவத்திதி யமாவாசைக்கும், தோயுந்தயிர் பாலுந் தூப சாம்பிராணியுஞ் சூடம்நெய்யுந் தேங்காயுஞ் செந்தமிழை, ஆயுங்கீரைநக ரதிகுலக் குப்பண்ணனை, அந்திதிரி சந்தியு மனுப்புமுழுவும்ப போலச்,

(சாயினுமையே.)

சத்திரங்கட்டித் தடாகங் குளம்வெட்டிச், சந்நிதிகட்டித் தடம்படியுங்கட்டி, மெத்தக்கிணறுந் தோண்டிவைத்து, மேலவர் முன்னமுந் தோரமுங் கை கட்டிப், பந்தி பிடித்த சதைச்சி யம்மாளைத்தன், பாகத்திலே வைத்திருந் தசிவாசலம், சற்குணன் பதமலர்க்கன்பன் சிறை நகர்க், காடைகுலச் செல்லன் கருப்ப ணன் குளப்பத்திற்.

(சாயினுடையே)

வேதன் பணியுஞ் சிவமலைவேலர் விசேடந் தாக்குங் கிரீடத் துக்குஞ் செம்பொன், மாதப்பிரம்புந் தாமுஞ் சட்டிசெவ்வுக்கு, வள் ளியம்மைக்குத் திணை மாவிளக்குக்கும், போகப் பருத்திக்கும் வாரித்தினந்தனம், பொழிந்திடும் பார்ப்பதிக்கே தடைதா குலத்தவர், நீதிச்செல்லயன் பெரியணன் முத்தயன், நிறைந்திடும் பொன்னை யன் செய் நெல்லங்கதிரைப் போலே

(போயினும்)

கோதாங்குழல் வள்ளி பங்கன் சிவாலைச், சூதனுக்குங் குந் சரப் பெண்பாயினுங்கூடே, சாதியும் பவளிகை முலைமயிருவாச் சண்பகம் புன்னை சடாம்புங்காடு மேவு, சேவுதக்கவர் சார்நுவி முந் செல்வம், விளங்கத் தினந்தரும் மேலானவர் பார் ஆதியர் கன்ணாந்தை குலச்சின்னத்தம்பி செல்லையன் வேலையன் குளத்திற் கொக்கு.

(சாயினுமையே)

தேவர்கள் தேவன் சிவமலை வேலன், திருவ ஞ்செயும் பூபாலன், நாவலருக்குந் தியாகன் பா ரஞ்செய் பயறகுலாதிப, காவலன் சின்னைய கரைப்புற மாந்தோப்பிற் காவெங்கணுமே, மலைமால் குளப்பற்றும், அன்றியும் ...

(சாயினு...)

காரை நகரிற் றென் கா... க்கக்காக் கிக்கியென்றும், ஆசபாரத் பன் சேனுபதிமால் செங்குளத்திலு

DR. U.V. ... SAMINATHA

பூபனிலத்திலும், பெருகிய கந்தப்பவேள் பழனத்திலும், தாராளமாகவே ஆந்தையுங் காடையுந், தாழைமடுவேவராய கூழைக் கடாக்களுந்

(சாயினுமைமே.)

வேழமுகவர்க்கிளை யோன். சிவமலை வேலவருக்கிளநீருங் கரும்புமெந், நாளுந்தரும் பனங் காடைகுலத்துயர் நல்லதம்பி பூபனஞ்சைக்கு மேல்பாலில், வாழுமருதுறை பட்டீசுரர் கோவில் மாந்தோப்பினு நல்ல ஆந்தை குலத்துள, வேளாண் இதும்ரமூல் பண்ணைப்பாட்டத்தும், மெத்தக்கத்திக் கொண்ட லாத்தி வண்ணாத்தியுஞ்

(சாயினுமைமே.)

முத்தூர்க் குளத்தின் புறவாய் நிலத்தின், முதன்மைமணிய குலராமசாமிதன், பற்றும் பெருமாள் நிலத்துங் காளியண்ணன், பாட்டத்தும் முத்துக் குமார கன்னகுலன், சுற்றுந்தென் ...ாஞ்சி நதிக்கரை யோரத்துந், துலங்கிய குப்பண வேள் தென்னந்தோப்பினுங், கொத்தியினை யெடுத்துச் செல்லப்ப னஞ்சை ..., குலவிய வாழைகுலைதள்ளும் வளம்போலே.

..., (சாயினுமைமே.)

கார் ... னம்பயினும் பட்டாலிச் சிவமலை, யாண்டவர் பூசைக்கு ...ரான் ...ஸ்தியும், பொன்னின் மணிகளும் பஞ்சவன்னப்பட் ... சிந் சவ்வாதும் புனுகுங் கதம்பமும், அன்ன முதனி ..., வாரதனைக்குக் கற்பூரங்களை தரும், பொன்னம் ...யாதாள கோத்திரப், புதல்வன் சுப்பய்ய விசித் ... சாயினுமைமேந்

(சாயினுமைமே.)

ஆயன் மருகன் விசாக ...வேலர்க்குச் செய்பணி, விடைக்கடிமையா பாராயனம்பினை யருள், சேயு ...சையுங் கட்டிச், செய்யலூர் நாடெலாந் தேர்க்கும் பருவத்திதி யமா... கொ...டபப்படிக்குச் செம்பொன் தூப சாம்பிராணியுஞ் சூட்ட... செந்தமிழ்பாடும் புலவரை, யாதரி ஆயுங்கீரைநக ரந்திகுலக் குப்பு... செய்யுங்கண்ணை நகர்ப் பொன் ப்புமுலும்ப போலச், ...ய சுப்பராயன் குளப்பற்றெல்லாம்

(சாயினுமை... ...னுமைமே.)